பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆடி 27 திங்கட்கிழமை 12.08.2019 | கதிர் 280

## இது ரகசியம் அல்ல!

ஒரு தேசியக் கட்சிக்கு ஜனாதிபதி பதவி கிடைத்தால் அக்கட்சி அதை வைத்தே தன்னை ஸ்திரப்படுத்தி வலுப்படுத்திவிடும்.

ஆனால், இங்கு, இப்போது மாறி நடந்திருக்கின்றது.

கிடைத்த ஜனாதிபதிப் பதவியை வைத்துக் கொண்டு பக்கம் 02

# ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ!

## நேற்று அறிவிப்பை வெளியிட்டார் மஹிந்த



கொழும்பு, ஓகஸ்ட் 12

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷவே களமிறங்குவார் என முன்னணியின் புதிய தலைவரான மஹிந்த ராஜபக்ஷ நேற்று அறிவித்தார். பக்கம் 10

## எங்கள் ஆட்சியில் தமிழருக்குத் தீர்வு!

### கோட்டாபய வாக்குறுதி

கொழும்பு, ஓக. 12

வடக்கு, கிழக்கு தமிழர்களின் பிரச்சினைகளுக்கு எமது ஆட்சியில் தீர்வு கிடைக்கும்.

– இவ்வாறு வாக்குறுதியளித்தார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ. பக்கம் 02

## மீண்டும் வெள்ளை வான் யுகம் எமக்கு வேண்டுமா?

### குருநாகல் கூட்டத்தில் ரணில் கேள்வி

வெள்ளை வான் கலாசாரத்துக்கு நாமே முடிவு கட்டினோம். வீழச்சியடைந்த பொருளாதாரத்துக்கும் புத்துயிர் கொடுத்தோம். எனவே, மீண்டும் வெள்ளை வான் யுகத்தை நோக்கி பக்கம் 11

## வைராக்கிய அரசியலை நான் ஒருபோதும் செய்யமாட்டேன்

### கோட்டா முன்னிலையில் கூறினார் மஹிந்த

கொழும்பு, ஓக.12.

வைராக்கிய அரசியலைத் தான் ஒருபோதும் முன்னெடுக்க போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும், பக்கம் 11

## மறுவாழ்வு வைத்தியசாலை முதல்முறை மாங்குளத்தில்

### வெள்ளியன்று பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 12

பொதுமக்களுக்காக முதலாவது மறுவாழ்வு வைத்தியசாலை மாங்குளத்தில் அமைக்கப்படவுள்ளது. பக்கம் 11

## கோட்டாவுக்காக பட்டாசு!



யாழ்ப்பாணம், ஓக. 10

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜ பக்கம் 11

## மொட்டின் தலைமைப் பதவியை பொறுப்பேற்றார் மஹிந்த எம்.பி.



கொழும்பு, ஓக. 12

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக எதிர்க்கட்சித்தலைவரும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பக்கம் 10

## கோட்டாவை வேட்பாளராக அறிவிக்க முன்னர் மஹிந்தவைச் சந்தித்தார் அமெரிக்க அதிகாரி!



கொழும்பு, ஓக. 12

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை அவசர அவசரமாக சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் அமெரிக்க இராஜாங்கத் பக்கம் 11

## கொச்சிக்கடை தேவாலயத்தில் அமெ. உதவி ராஜாங்க செயலர்



கொழும்பு, ஓக. 12

இலங்கைக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பதில் உதவி பக்கம் 10

LATHA TAILORING & EMBROIDERY DESIGNING



SAREE BLOUSE
EMBROIDERY WORK
WOMEN'S & MENS ALTERATION
COUSTUMES
CHUBIDAR & MORE AVAILABLE





Unit 8 Champion Mall
495 High Road
Wembley HA0 2DH
Tel:07459 078 919



## எங்கள் ஆட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் –

இலங்கை அரசியலில் மிகவும் உறுதியான திருப்புமுனையை குறித்து நிற்கும், இந்த வரலாற்று மாநாட்டில், இலங்கை பொதுஜன பெரமுன முதன்மையான பல அரசியல் கட்சிகளினதும், சுயாதீன அமைப்புகளினதும் பல குழுக்களினதும், பொது நோக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும், ஜனாதிபதி வேட்பாளராக இலங்கை பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவால் இன்றையதினம் (நேற்று) என்னைப் பெயரிடுதல் தொடர்பில் நான் கௌரவத்துடனும் நேர்மையுடனும் ஏற்றுக்கொள்கின்றேன்.

அந்த வேட்புரிமையை நான் எவ்வாறு காண்கிறேன் என்றால், இந்த நாட்டில் எதிர்கால அரசியலில் புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்குவதற்குரிய மக்கள் சார்பான, முற்போக்கு சக்திகளினால் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட யுகத்தின் பணியாகவே ஆகும்.

இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு மஹிந்தவுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நான் தலை வணங்குகிறேன்.

கடந்த காலம் முழுவதும் நாட்டுக்காகக் குரல் எழுப்பிய மகா சங்கத்தினருக்கும், சமய மதகுருமார்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், தேசிய அமைப்புகளுக்கும், ஊடகவியலாளர்களுக்கும், சமூக வலைதளங்களை பயன்படுத்துநர்களுக்கும், விசேடமாக நாட்டின் இளைய தலைமுறையினர் முதன்மையாகக்கொண்டு பொதுமக்களுக்கும், நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது கௌரவமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

விசேடமாக என்னிடம் இந்த பொறுப்பை ஒப்படைத்த இலங்கை பொதுஜன பெரமுனவுக்கும் எனது நன்றியை இந்தத் தறுவாயில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் என்நாட்டை நேசிக்கின்றேன். நான் எனது நாட்டைப் பற்றி பெருமிதம் கொள்கின்றேன். எனக்கு எனது நாடு பற்றிய எதிர்கால நோக்கு உள்ளது.

முழுமொத்த இலங்கை வாழ் மக்களுக்கும் தலைமைத்துவம் வழங்கி, தாய்நாட்டுக்கு சந்தோசம் மற்றும் சுபீட்சம் என்பவற்றை மலரச் செய்வதற்கு கிடைக்கப் பெறும் இந்த வாய்ப்பினை நான் மிகவும் மெச்சுகின்றேன்.

ஒப்படைக்கப்படும் எந்தவொரு பொறுப்பையும் உயர் மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு ஒருபோதும் தயங்காத நான், மக்கள் முன்னிலையில் இன்றுள்ள சவாலை வெற்றியடைய செய்வதற்கு தயாராக உள்ளேன், என்பதை உங்கள் முன்பாக மிகவும் பொறுப்புடன் கூறுகிறேன்.

எனது 20 ஆண்டு தரைப் படைச் சேவையிலும், ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு அண்மித்த காலப் பகுதி அரச உத்தியோகத்தராகவும் சேவையாற்றும்போது என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு பொறுப்பினையும் வெற்றிகரமாக நிறைவேற்றினேன்.

நான் எப்போதும் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பினை வரையறுக்குள் உட்படாது, அங்கீகாரங்களுக்கு அப்பாற் சென்று அப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிஎடுத்துள்ளேன்.

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு அண்மித்தக் காலப் பகுதி நடைபெற்ற பயங்கரவாதத்தை 3 ½ ஆண்டுகள் போன்ற குறுகிய காலப் பகுதியில் முடிவுறுத்துவதற்கு, முப்படைத் தளபதியான மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு தேவையான மூலோபாய மற்றும் நிருவாக ஒத்துழைப்பை வழங்குவதற்கு, எனக்கு இயன்றதற்கான காரணம் அந்தப் பண்பு என்னிலிருந்தமையாகும்.

அதே போன்று பின்னரான காலப்பகுதியில் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக, கொழும்பு நகரத்தை ஆசியாவின் வேகமாக முன்னேற்றம் அடைந்துவரும் நகரமாக உருவாக்குவதற்கும், நகரத்தின் தொடுவான ரேகையை மாற்றியமைக்கும் –மனம்கவரும் பல முதலீடுகளை கொண்டு வருவதற்கும், முடிந்தமைக்கான காரணம், நான் ஒருபோதும் வரையறைகளுக்கள் உட்படாது பொறுப்புகளை நிறைவேற்றியமையாகும்.

அன்று நாட்டுக்காக எனது பொறுப்புகளை நிறைவேற்றும் போது, எந்தவொரு வெளியக சக்திகளும் அதற்கு தடையேற்படுத்துவதற்கு நான் இடமளிக்கவில்லை.

எனது நாட்டை எதிர்பவர்களுக்கு நான் ஒருபோதும் தலை வணங்கியதில்லை.

எதிர் காலத்திலும் எனது தாய் நாட்டின் இறையாண்மைக்குப் பாதகம் ஏற்படுவதற்கு இடமளிக்க மாட்டேன்.

இன்று இந்த நாட்டுக்கு, எதிர் காலம் தொடர்பாக நோக்கை உள்ள, நாட்டின் அபிவிருத்திக்கு திட்டமொன்று உள்ள, அந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆற்றல் உள்ள ஒழுக்கமுடைய, ஊழல்களற்ற மக்கள் நேயத்துடனான, நாட்டுப்பற்றுடையதலைமைத்துவம் தேவைப்படுகின்றது. ஒரு சனாதிபதியிடமிருந்து மக்கள் எதிர்பார்ப்பது அவ்வாறான தலைமைத்துவமாகும்.

நீங்கள் எதிர்பார்க்கும் தலைமைத்துவத்தை அளிக்கும் ஆற்றல் எனக்குள்ளது என்பதை நான் தற்போதும், எனது செயற்பாடுகள் மூலம் உறுதிப்படுத்தியுள்ளேன்.

எமது அரசின் முதலாவது கடமைப் பொறுப்பு யாதெனில் நாட்டில் பூரண பாதுகாப்பை உறுதிப்படுத்தலாகும்.

எமக்கு மீண்டும் இந்த நாட்டை உலகத்தில் பாதுகாப்பான நாடாக உருவாக்க முடியுமென நான் மிகவும் நம்பிக்கையுடன் கூறுகின்றேன்.

உங்களதும், உங்களது பிள்ளைகளதும் பாதுகாப்பின் பொறுப்பினை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

பௌத்த தத்துவக் கோட்பாட்டினுள் எமக்கு எல்லா சமயங்களுக்கும் கௌரவமளிக்கும்படி கற்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு பழமை வாய்ந்த எழுத்திலான வரலாற்றினைக் கொண்டுள்ள எமது நாட்டில் பல வேறு இனத்தவர் வாழ்கின்றார்கள். அவர்கள் பல்வேறு சமயங்களை வழிபடுகின்றனர்.

நாம் எப்போதும் ஒவ்வொருவரினது சமயத்திற்கு கௌரவமளித்து, ஒவ்வொருவரினது கலாச்சார விழுமியங்களுக்கு மதிப்பளித்து நற்புறவுடன் வாழ்ந்த இனமாகும். எமது பலமாக அந்த ஒற்றுமை இருத்தல் வேண்டும்.

இந்த தாய் நாட்டில் பிறக்கும் எவரொருவரும் அச்சம், சந்தேகமின்றி வாழக் கூடியதான, பாதுகாப்பான சூழலை மீண்டும் கட்டியெழுப்புவேன் என்று நான் உறுதி கூறுகின்றேன்.

நான் ஒருபோதும் தீவிரவாத பயங்கரவாதத்திற்கு இடமளிக்க மாட்டேன்.

அதே போன்று வடக்கு மக்களுக்கு தேவையான, விசேடமான எதிர்பார்ப்புகள் பற்றி எமக்கு நல்ல புரிந்துணர்வு உள்ளது. அவர்களின் இப்பிரச்சினைகளை எமது அரசாங்கத்தால் உறுதியாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

2015 – 2014 ஆகிய காலப் பகுதிகளில் மகிந்த சிந்தனை கொள்கையின்கீழ் எமது நாட்டில் பாரிய அபிவிருத்தி ஏற்பட்டது. தற்போது நாம் அதிலிருந்து நாட்டை முன்கொண்டுச் செல்லுதல் வேண்டும்.

அதற்காக தற்கால உலகளாவிய பொருளாதார செல்நெறிகளுடன் எனது நோக்கினை ஒன்றிணைத்து எதிர் காலத்திற்கு தேவையான, புதிய திட்டங்களை சமர்ப்பிப்பேன். கடந்த காலப் பகுதியில் இந்த நாட்டின் கற்று அறிந்தவர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் வியாபாரிகள் அகியோருடன் இணைந்து வியத்மக போன்ற அமைப்புகளின் ஊடாக மேற்கொண்ட கற்கைகளின் மூலம் இலங்கை பொதுஜன முன்னணியால் கிராமத்துடன் உரையாடல் (கம சமக பிலிசந்தரக்) நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நாடு பூராகவும் சென்று, பொதுமக்களுடன் கலந்துரையாடி பெற்றுக்கொண்ட அறிவினையும் நாம் இதன்போது பயன்படுத்துவோம்.

எமது நோக்கம் யாதெனில், பயனுள்ள பிரஜை, மகிழ்ச்சியுடன் வாழும் குடும்பம், ஒழுக்கமிக்க சமூகம் மற்றும் சுபீட்சமான நாட்டை கட்டியெழுப்புதலாகும்.

ஒவ்வொரு பிரஜைக்கும் பொருளாதார ஸ்திரத்தன்மையும், முன்னேற்றமடைவதற்கு சம வாய்ப்பும், கௌரவத்துடன் வாழும் உரிமையும் இருத்தல் வேண்டும்.

அதற்கு தேவைப்படும் சூழல் கட்டியெழுப்பும் மக்கள் சார்ந்த, கேந்திர பொருளாதார கொள்கை நாம் அறிமுகப்படுத்துவோம்.

மனித வள அபிவிருத்தியை கட்டியெழுப்புதல் எமது அரசின் அடிப்படைப் பொறுப்பாகும்.

நாட்டில் எதிர்காலதலைமுறையினரை பயனுள்ள பிரஜைகளாக்குவதற்கு தேவையான அறிவாற்றலால் அவர்களை மேம்படுத்துவதற்கு, அவர்களின் ஆற்றல், திறன் வளர்ச்சிக்கு நாம் விசேட கவனம் செலுத்துவோம்.

எல்லா இளைஞர் யுவதிகளுக்கும் கல்வித் துறையில் வழிதவறுவதற்கு இடமளிக்காது, உயர் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி என்பவற்றை கற்பதற்கான வாய்ப்புகளை விஸ்தரிப்பேன். இதற்காக தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை மிக குறுகிய காலப் பகுதியில் கட்டியெழுப்புவேன். அதன்மூலம் புதிதாக தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், இளைய தலைமுறையினர் ஊடாக தனியார் தொழில்முயற்சியாளர்களை அதிகமாக உருவாக்குவதற்கும், தேவையான பொருளாதார சூழலை உருவாக்குவதற்கு நாம் எதிர் பார்க்கின்றோம்.

கல்விச் சீர்திருத்தங்கள் ஊடாக புத்தாக்கங்களை உருவாக்குவதற்கு எமது இளைய தலைமுறையினருக்கு ஒத்தாசை வழங்குதல் வேண்டும்.

எமது நீண்டகால நோக்கமாக இருக்க வேண்டியது யாதெனில், புதிய படைப்புகளின் மூலம் உலகத்தில் முன்னிலையில் உள்ள நாடாக இருத்தலாகும்.

அபிவிருத்தியில் பாரிய எதிர் நீச்சல் பொருட்டு புதிய உலக செல்நெறிகளை பின்பற்றி தொழில் நுட்பத்தை முதன்மையாகக் கொண்ட எதிர்காலத் திட்டங்களை நாம் ஒவ்வொரு துறைக்கும் அறிமுகப்படுத்துவோம்.

எமது பொருளாதார கொள்கையில் உள்நாட்டு வியாபாரங்களை பாதுகாத்து உலகளாவிய பொருளாதாரத்தில் புதிய சந்தை வாய்ப்புகளை கண்டறிவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

எமது நாட்டு மக்களின் மூன்றில் ஒரு பகுதியினருக்கு அண்மித்த எண்ணிக்கையினர் இன்றும் விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய தொழில்துறைகளின் மீது தங்கியுள்ளனர்.

இந்தக் கைத்தொழிலை மிகப் பயனுள்ளதாக்கி இந்த மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நாம் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தலாம்.

மக்கள் நேயத்துடன்கூடிய, வினைத்திறனுடனான அரசாங்க சேவையினை உறுதிப்படுத்தல் அரசின் அடிப்படை பொறுப்பாகும்.

அதற்கு முதலாவதாக, அரச உத்தியோகத்தர்களை அரசியல் செல்வாக்குகளிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.

தமது கடமைப் பொறுப்புகளை உரியவாறு நிறைவேற்றுவதற்கு தீர்மானங்களை மேற்கொள்கின்ற, நேர்மையான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தேவையான ஆகக்கூடிய சட்டத்துடனான பாதுகாப்பினை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

அதேபோன்று உயர் தரத்திலான சேவையினை மக்களுக்கு வழங்குவதற்கு தேவையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரச நிறுவனங்களில் ஈ – தொழில்நுட்பம் ஆகக்கூடியதாக பயன்படுத்துவதன் ஊடாக பொது மக்களுக்கு மிக நல்ல வினைத்திறனுடனான சேவையினை வழங்குவேன்.

அரசிடமிருந்து பெற்றுக்கொள்கின்ற சேவைகள், இயன்றவரை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வழங்குவதன்மூலம் ஊழலுக்குள்ள வாய்ப்புகளை குறைப்பேன்.

முறையின்றி உள்ள நகரமயப்படுத்தலானது, தற்காலத்தில் பல்வேறு சமூக பிரச்சினைகளுக்கு காரணமாகியுள்ளது. நாம் இந்தப் பிரச்சினையின் மீது மிகவும் ஆக்கத்திறனுடன் பார்த்தல் வேண்டும்.

இலங்கையில் எந்தவொரு இடத்திலும் வாழ்வதற்கு பொருத்தமான சூழல் உள்ள நாடாகும். ஆகையால் நாம் நாடு முழுவதும் அபிவிருத்தியினை விரிவுபடுத்தல் வேண்டும்.

வேலைவாய்ப்புகள் மற்றும் வியாபார வாய்ப்புகளை தேடி பொது மக்கள் நகரத்தை நோக்கி வருகின்றனர். அதற்குப் பதிலாக நாம் அந்த வாய்ப்புகளை பொது மக்களிடையே கொண்டுச் செல்லுதல் வேண்டும்.

நாட்டில் ஒவ்வொரு பிரதேசத்தையும் இணைத்துள்ள வீதி முறைமைகளையும் புகையிரத வீதிகளையும் மேம்படுத்துவதற்கு, போக்குவரத்து சேவைகளில் பாரிய முன்னேற்றத்தை கூடிய விரைவில் நாம் கைப்பற்றுதல் வேண்டும்.

நீர், மின்சாரம், மருத்துவமனைகள் போன்ற

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரம்பரியமான தனது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தேய்த்துக் குட்டிச் சுவராக்கி அதில் சாதனை புரிந்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அதற்குக் காரணம் உண்டு. வழக்கமாக கட்சியின் மூலம் ஒருவர் ஜனாதிபதியாவார். அந்த ஜனாதிபதிப் பதவி மூலம் அவர் கட்சியையும் ஸ்திரப்படுத்தும் தலைமையை வழங்குவார்.

ஆனால், மைத்திரிபால சிறிசேன தமது சுதந்திரக் கட்சி மூலம் ஜனாதிபதி ஆனவர் அல்லர்.

கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளருக்கு எதிராக – எதிரணி சார்பில் – தேர்தலில் போட்டியிட்டவர். அதன் மூலம் கிடைத்த ஜனாதிபதி பதவியை வைத்துக் கொண்டு – அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி – கட்சித் தலைமையைக் கைப்பற்றினார்.

இப்போது அந்த ஜனாதிபதி பதவி அவருக்கு இன்னும் ஓரிரு மாதங்கள்தாம். அதனோடு கட்சித் தலைமையும் சேர்ந்து பறிபோனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

“கட்சி மிச்சம் இருந்தால் அல்லவா அவர் அதற்குத் தலைமை தாங்குவதற்கு?” – என்று சுதந்திரக் கட்சியின் நீண்ட கால ஆதரவாளர் ஒருவர் பெரும் விசனத்துடன் புலம்புகின்றார்.

குறுகிய காலத்தில் ஒரு கட்சியைத் தொடங்கி, அதைப் பாரம்பரிய தேசியக் கட்சிகளை விட விஞ்சிய அளவுக்கு வளர்த்துக் காட்டுவதற்கு ராஜபக்ஷ குடும்பத்தை எப்படி உதாரணம் காட்ட முடியுமோ, அது போல நீண்ட காலப் பாரம்பரியமும் வரலாறும் கொண்ட ஒரு தேசிய கட்சியைக் மிகக் குறுகிய காலத்தில் குட்டிச் சுவராக்கி, அது இல்லை என்றளவுக்கு அதை ஒழித்துக் கட்டிய சாதனைக்கு உதாரணமாக மைத்திரிபால சிறிசேனவைத் தான் காட்ட வேண்டும்.

ஓரிரு மாதங்களில் அவரது ஜனாதிபதிப் பதவிக் காலம் முடிவுறும் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அவரைத் தவிர வேறு யார், யார் இருப்பார்கள் என பதைத் தேடி எண்ணித்தான் பார்க்க வேண்டியிருககும்.

பண்டாரநாயக்காக்கள், ராஜபக்ஷக்கள் கட்டி வளர்த்த ஒரு கட்சியை விதுாகன் போல நடந்து முற்றாகக் கரைத்து அழித்து விட்டார் மைத்திரியார்.

இந்தப் பத்தியில் முன்னரும் பலதடவைகள் நாம் சுட்டிக்காட்டிய படி, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக நாளொரு கதையும், பொழுதொரு பேச்சுமாகப் புசத்தி வந்த அவர், இப்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உத்தியோகபூர்வ வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ என்பது அறிவிக்கப்பட்டமையை அடுத்து, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது என்ற தனது தொடர் புசத்தலை இத்துடன் நிறுத்துவார் என நம்பலாம்.

சுதந்திரக் கட்சியைத் தேய்த்து அழித்த அவர், இப்போது தன்னுடன் கட்சியில் எஞ்சியிருக்கும் ஒரு சில பிரமுகர்களுக்கு அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிடம் இடம்கேட்டு கெஞ்சுகின்றார் என்றும் கேள்வி.

ஜனாதிபதி பதவி கிடைத்ததும், அதை வைத்துக் கொண்டு சிங்கம் போல கிளர்ந்தெழுந்து சு.க. தலைமைப் பதவியை மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பறித்த மைத்திரி, இப்போது அதே மஹிந்தர் முன்னால் பூனைக் குட்டி போல சுருண்டு நின்று தனது கட்சிகாரர்களுக்கு இடம் கேட்கும் அவலம்...!

தோற்றுப்போன அரசியல்வாதிகளுக்கு முக்கிய உதாரணமாகப் போகின்றவர் அவர்தான்.

போறபோக்கில் அவர் தலைமை வகிக்கும் சு.க. வேறு வழியின்றி மஹிந்தவின் பொதுஜன பெரமுனவுக்குள் முழுதாகக் கரைந்து போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

- மின்னல் -

# நானே இந்தியாவின் மிகச் சிறந்த நண்பன்!

## அடித்துக் கூறுகிறார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஒக. 12
இலங்கையில் எங்களால் மட்டுமே பாதுகாப்பையும் அபிவிருத்தியையும் அளிக்க முடியும் என்பதை இந்தியா புரிந்து கொண்டிருப்பதாகவும், இந்தியாவின் மிகச் சிறந்த நண்பனாக தாமே இருக்கிறார் எனவும், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்பதற்குச் சில மணி நேரம் முன்னதாக, இந்திய ஊடகவியலாளர் பகவான் சிங்கிற்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

**கேள்வி** – உங்கள் வேட்பாளர் யார் என்பது அனைவருக்கும் தெரியும்; நவம்பர் மாதம் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக, உங்கள் சகோதரரும் முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோட்டாபய ராஜபக்ஷவையே தெரிவு செய்வார் என்று அவர்கள் சொல்கிறார்கள்? அடுத்த ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெறும்போது பிரதமர் வேட்பாளராக இருப்பீர்கள் என்று கூறியுள்ளீர்களா?

**மஹிந்த ராஜபக்ஷ** – (சிரிக்கிறார்) ஆம், இல்லை. நாங்கள் இன்னும் முடிவு செய்யவில்லை (கோட்டாபய வேட்பாளராக இருப்பது குறித்து), ஆனால் மக்கள் முடிவு செய்துள்ளார்கள் என நினைக்கிறேன் (அது கோட்டாபயவாக இருக்கவேண்டும்).

**கேள்வி** – கடந்த முறை கூட நீங்கள் ஜனாதிபதியாகவும், உங்கள் சகோதரர்கள் அரசில் சக்திவாய்ந்த பதவிகளிலும் இருந்த நிலையில், நீங்கள் ஒரு குடும்ப ஆட்சிக்குச் செல்கிறீர்கள் என்று எதிர்க்கட்சி தரப்பிலிருந்து குற்றச்சாட்டுகள் எழுந்தன. நீங்கள் தோல்வியடைந்த போது மக்கள் அதை ஏற்றுக் கொண்டனர் எனத் தோன்றியது. அது மீண்டும் நடக்காதா?

**மஹிந்த ராஜபக்ஷ** – அந்த குற்றச்சாட்டுகள் அரசியல் நோக்கம் கொண்டவை, உண்மையானவை அல்ல. குடும்ப ஆட்சி என்ற பேச்சு இனி பொருந்தாது, ஏனென்றால் மக்கள் அதை தங்கள் நலனுக்காக விரும்புகிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும். அவர்கள் அபிவிருத்தியை விரும்புகிறார்கள், அவர்களுக்கு வேலைகள் வேண்டும். நாங்கள் அதை வழங்குவோம்.

கோட்டாபய ஒரு மோசமான மனிதர்



அல்லர், அவர் ஒரு செயல் மனிதர், அவர் பலவற்றைப் பேசிக் கொண்டிருப்பவர் அல்லர், அமைதியாகச் செயற்படுகிறார். அவர் ஜனாதிபதியாகவும், நான் பிரதமராகவும், இணைந்து, மக்களுக்கு இப்போது தேவையானதை வழங்க முடியும். மக்கள் அதை அறிந்திருக்கிறார்கள்.

13 ஆவது திருத்தம் இருந்தபோதிலும் இப்போது சட்டம் ஒழுங்கு இல்லை, ஜனநாயகம் இல்லை, மாகாண சபைகளுக்குத் தேர்தல் இல்லை. தற்போதைய அரசு துன்புறுத்தல்கள் மற்றும் வழக்குத் தொடருவதிலும், எனது அரசுடன் தொடர்புடைய நபர்களைப் பழிவாங்குவதிலும் மட்டுமே கவனமாக இருந்தது.

இலங்கைக்குப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியை நாங்கள் வழங்குவோம், மேலும் இந்தியாவுடன் நல்ல உறவை உறுதி செய்வோம் என்று புதுடில்லிக்குத் தெரியும்.

**கேள்வி** – முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு கோட்டாபய காரணமா?

**மஹிந்த ராஜபக்ஷ** – அது அவர்களால் பரப்பப்பட்ட பொய். அவர்கள் முஸ்லிம் கிராமங்களைத் தாக்கி, 'ராஜபக்ஷவுக்கு வாக்களியுங்கள்' என்று சத்தமாகக் கூறுவார்கள், எனவே பழி எம்மீது இருக்கும். இது எங்களுக்கு எதிராக ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட திட்டமிட்ட பரப்புரை. ஆனால் இப்போது முஸ்லிம் மக்களுக்கு உண்மையில் யார் பொறுப்பு என்று தெரியும், அவர்கள் புத்திசாலிகள் மற்றும் படித்தவர்கள்.

**கேள்வி** – கோட்டாபய மீது போர்க்குற்றச்சாட்டுகள் உள்ளன என்று?

**மஹிந்த ராஜபக்ஷ** – அவை எல்லாம் அரசியல் (குற்றச்சாட்டுகள்). உண்மையில் போரை வழிநடத்திய சரத் பொன்சேகாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்க முடிந்தால், அதனை அப்போது ஆதரித்த தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்வியுற்ற விதத்தைப் பார்த்து இப்போது எங்களை ஏன் ஆதரிக்க மாட்டார்கள்?

**கேள்வி** – எனவே சிறுபான்மையினர் உங்களுக்கு வாக்களிப்பார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

**மஹிந்த ராஜபக்ஷ**– ஆம். என்ன நடந்தது என்பதை தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். அமைச்சரவையில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் குறைந்தபட்சம் ஏதாவது செய்கிறார்கள், ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களுக்காக எதுவும் செய்யவில்லை; அவர்கள் தங்களை மட்டுமே கவனித்துக்கொள்கிறார்கள்.

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் குறைந்தபட்சம் அரசை எதிர்க்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தன், சுமந்திரன் போன்ற தலைவர்கள் அரசை ஆதரிக்கின்றனர், ஆனால் அவர்களால் மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. அவர்கள் தங்களைத் தாங்களே பெறுகிறார்கள்.

நாங்கள் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்குள், அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வு தமிழர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்வேன்.

**கேள்வி** – நரேந்திர மோடி அரசுடனான உங்கள் உறவுகள் எப்படி இருக்கின்றன. ஏனென்றால் 2015 ஆம் ஆண்டில் நீங்கள் மிகவும் மகிழ்ச்சியற்றவராக இருந்தீர்கள். ஜனாதிபதித் தேர்தலில் உங்களுக்குத் தோல்வியை ஏற்படுத்தியதற்காக இந்தியாவின் றோ மீது குற்றம்சாட்டினீர்கள்?

**மஹிந்த ராஜபக்ஷ** – கடந்த காலம் கடந்துவிட்டது. நாங்கள் அதை மறந்துவிட்டோம். முன்பை விட இப்போது நாம் ஒருவருக்கொருவர் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளோம். இலங்கையில் எங்களால் மட்டுமே பாதுகாப்பையும் அபிவிருத்தியையும் வழங்க முடியும் என்பதை இந்தியா புரிந்து கொள்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையிலான மோதல்களே, ஈஸ்டர் குண்டுவெடிப்பு நிகழ்ந்ததற்கு ஒரு காரணம்.

மே மாதம் அவரை (மோடி) சந்திக்கச் சென்றேன். கடந்த காலத்தில் (2015), இரண்டு (சீன) நீர்மூழ்கிக் கப்பல்கள் இங்கு வந்து (கொழும்பு துறைமுகம்) திரும்பிச் சென்றதால் அவர்கள் கவலைப்பட்டனர். ஆனால் இப்போது என்ன நடந்தது?

அவர்கள் வந்து இங்கு தங்கிவிட்டார்கள். அம்பாந்தோட்டை துறைமுகம் சீனர்களுக்கு விற்கப்பட்டதில் இருந்து பல சொத்துக்கள் மற்றும் திட்டங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கொழும்புத் துறைமுகநகரம் 200 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் (சீனர்கள்) இப்போது நிரந்தரமாக இங்கே இருக்கிறார்கள்.

**கேள்வி** – நீங்கள் ஆட்சிக்கு வந்தால், இங்குள்ள இந்தியத் திட்டங்களுடன் ஒப்பிடும் போது சீன இருப்பு விகிதத்தை மாற்ற முடியுமா?

**மஹிந்த ராஜபக்ஷ** – இந்த விடயங்கள் குறித்து நாங்கள் பேச்சு நடத்த வேண்டும்; நீங்கள் வேறொரு நாட்டுடன் உடன்பாட்டில் கையெழுத்திடும்போது நாங்கள் அதற்கு கட்டுப்படுவோம். ஆனால் பலாலி மற்றும் மத்தளவில் உள்ள விமான நிலையங்கள் மற்றும் திருகோணமலையில் உள்ள எண்ணெய்த் தாங்கிகள் போன்றவற்றில் (ஈடுபாடு, முதலீடு) இந்தியா முன்னேற முடியும். நாங்கள் தனியார் மயமாக்கலுக்கு எதிரானவர்கள். இது எங்கள் கொள்கை.

**கேள்வி** – குறிப்பாக ஈஸ்டர் குண்டுவெடிப்பின் பின்னர், இந்தியா உங்களுக்கு ஒரு முக்கியமான நட்பு நாடு என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? இந்தியா உங்கள் அரசுக்கு எச்சரிக்கைகளை அனுப்பியிருந்தது, ஆனால் அவை புறக்கணிக்கப்பட்டனவா?

**மஹிந்த ராஜபக்ஷ** – இலங்கையைப் பொறுத்தவரை, இந்தியா மிக நெருக்கமான அண்டை நாடு, அவர்களின் செல்வாக்கு இங்கு மிகவும் உணரப்படுகிறது. என்னைப் பொறுத்தவரை, இந்தியாவின் சிறந்த நண்பன், மஹிந்த ராஜபக்ஷவாகவே இருப்பார்.

ஆம், குண்டுவெடிப்பு ஆபத்து குறித்து இந்தியா எங்களை எச்சரித்தது, ஆனால் அவர்கள் (ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில்) தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்ததால் அது கவனிக்கப்படாமல் போனது. ஒரு நாட்டை இரண்டு அதிகார மையங்களால் திறம்பட இயக்க முடியாது.

**கேள்வி** – காஷ்மீரின் நிலைமை மற்றும் மோடி அரசு எடுத்த நடவடிக்கை ஆகியவற்றை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?

**மஹிந்த ராஜபக்ஷ** –அங்கு என்ன நடந்தது என்பது, இந்தியாவின் உள் விவகாரம் இல்லையா?

ஆனால், அணுசக்தி வல்லமை கொண்டதாகவும், அண்டை நாடுகளாகவும் இருப்பதால், அவர்கள் (இந்தியாவும் பாகிஸ்தானும்) ஒன்றாக அமர்ந்து பேசலாம் என்று நான் கூறுவேன். இருவரால் நம்பப்படும், ஐ.நா பொதுச்செயலாளர் போன்ற ஒரு மூன்றாம் தரப்பு அவர்கள் இருவரையும் மேசைக்கு கொண்டு வரக்கூடும். (ஐ)

# கோர விபத்தில் இருவர் அந்த இடத்திலேயே சாவு!




மட்டக்களப்பு, ஒக. 12

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

காத்தான்குடிப் பொலிஸ் பிரிவின் நாவற்குடா பிரதான வீதியில் இந்த விபத்து இடம்பெற்றது. ஏறாவூரில் இருந்து கோழிகளை ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்றே டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

மணல் ஏற்றிக்கொண்டு முன்னால் சென்ற டிப்பர் வாகனத்தின் டயர் வெடித்தமையால் கட்டுப்பாட்டை இழந்து கோழி ஏற்றிச் சென்ற வாகனம் அதனுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில், கோழி வாகனத்தில் இருந்த இரண்டு பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். இன்னொருவர் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஐ)



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மஹிந்த தரப்பை தமிழர் ஆதரிப்பரா?

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவும் தமிழ் ஊடகங்களுக்கு தாராளமாகப் பேட்டிகள், செவ்விகள், செய்திகள் வழங்குகின்றனர்.

இது தேர்தல் காலம். வழமையாக அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை அள்ளி வீசும் சமயம். மஹிந்தவும் கோட்டாபயவும் என்ன விதிவிலக்கா? அவர்களும் தம்பாட்டில் வாக்குறுதிகளை அள்ளி வீசத்தானே செய்வர்...?

தங்கள் அரசு ஆட்சிக்கு வந்தால் இரண்டு வருடங்களில் தீர்வு என்கின்றார் மஹிந்தர். இது ஒன்றும் புதிய வாக்குறுதியல்ல. ஆறு மாதங்களுக்கு முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழுக்கு அவர் கூறிய செய்திதான்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இரண்டு வருடங்களில் தீர்வு என்ற அவரது வாக்குறுதியை இலகுவாக நம்புவதற்குத் தமிழர்கள் தயாரில்லை என்பதுதான் நிலைமை. அப்படி அவர்கள் நம்பாமல் இருப்பதற்கு பல நியாயங்கள் உண்டு.

2005 நவம்பரில் முதன்முதலாகத் தாம் ஜனாதிபதி தேர்தலைச் சந்தித்த போது மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதிகளைத் தமிழர்கள் மட்டுமல்லர், முழு நாடுமே அறியும்.

ஒரே ஒருமுறை ஜனாதிபதியானதும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பேன் என்று தொடங்கி, அச்சமயம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர் வழங்கிய வாக்குறுதிகள் பலப்பல.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூட அப்போது மஹிந்த ராஜபக்ஷவை நம்பி 'யதார்த்தவாதி' என்று தமது மாவீரர் தின உரையில் அவரைப் புகழ்ந்துரைக்கத் தவறவில்லை.

ஆனால், மக்களுக்கு வாக்குறுகி அளித்து ஏமாற்றுவதுதான் அரசியல்வாதிகளின் யதார்த்தப் போக்கு என்பதை எவரும் அப்போது உய்த்துணர்ந்திருக்கவில்லை. அதைத் தான் உறுதிப்படுத்தினார் மஹிந்தர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பேன் என்று வாக்குறுதி கொடுத்து, அதன் அடிப்படையில் ஆட்சிப் பீடம் ஏறிய மஹிந்தர், அந்த முறைமையை மேலும் உறுதிப்படுத்தும் அரசியல் வேலைகளைத்தான் செய்தார். தனது வாழ்நாள் முழுவதும் அப்பதவியில் தாம் தொடர்வதற்கான ஏற்பாடுகளை நிலைப்படுத்தினார்.

இப்போது அவரும், அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவும் தீர்வு குறித்துப் பேசுகின்றார்கள்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படை ஏற்பாடுகளை – உயிர்ப்பான ரத்துக்களை – அடியோடு நிராகரித்து விட்டு அவர்கள் '13 பிளஸ்' குறித்துப் பேசுவது மிக மிக வேடிக்கையாகும்.

தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கு இணைப்பு, காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் ஆகியனவே அதிகாரப் பகிர்வின் மிகமிகப் பிரதான விடயங்கள்.

அவற்றை அடியோடு நிராகரித்துவிட்டு அதிகாரப் பகிர்வு குறித்து அவர்கள் பேசுகின்றமை அரசியல் கோமாளித்தனமின்றி வேறில்லை.

வடக்கு – கிழக்கு இணைப்பை ஏற்கனவே உயர்நீதிமன்றம் மூலம் துண்டாக்கச் செய்து, பிளக்கப் பண்ணி விட்டாயிற்று. அவற்றை மீளச் சட்டரீதியாக இணைக்கும் அதிகாரம் கொழும்பு அரசுக்கு இருந்தும் அது, இப்போதைக்கு அதைச் செய்யப் போவதேயில்லை என்பது திண்ணம்.

மாகாணங்களுக்குப் பகிர வேண்டிய 13 ஆவது திருத்தத்தின் கீழ் பகிர்வதற்கு இணங்கி இலங்கை அரசு சட்டமாக்கியது காணி அதிகாரப் பகிர்வாகும்.

அவ்வாறு காணி அதிகாரம் மாகாணங்களுக்கு பகிரப்பட்டுவிட்டதாக அரசமைப்பில் இப்போது எழுதப்பட்டிருந்தாலும் அரசு அதனை நடைமுறைப்படுத்தவே இல்லை. அந்தக் காணிப் பகிர்வு அதிகாரத்தை மாகாணங்களுக்கு விட்டு வைக்கும் எண்ணம் தமக்கு அடியோடு இல்லை என்பதை கோட்டாபய ராஜபக்ஷ ஏற்கனவே தெளிவுபடுத்தி விட்டார்.

காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கினால் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அது குந்தகமாகி விடும் எனப் புது அரசியல் வியாக்கியானத்தை வேறு, கோட்டாபய முன் வைத்து வருகின்றார். இந்தச் சூழலில் கோட்டா – மஹிந்த அணி அதிகாரத்துக்கு வந்தால் காணி அதிகாரம், இணைப்பு ஏதும் சாத்தியப்படப் போவதில்லை என்பது தெளிவு.

பொலிஸ் அதிகாரத்தைப் பொறுத்தவரை அது, முழு மாகாணத்துக்கும் வழங்கப்படுகின்றமையை மஹிந்த – கோட்டா தரப்பு ஏற்கவே இல்லை. 'சமூகப் பொலிஸ்' (Community Police ) என்ற அடிப்படையில் கிராம ரீதியாக ஒரு ஷெரீப் தலைமையில் சில குழுக்கள், குழுக்களாக மாகாணத்தின் கீழ் பொலிஸ் இயங்கலாம் என்பதுதான் அவர்களின் தீர்மானம். அதாவது மாகாணங்களின் கீழ் வலுவான ஒரு பொலிஸ் கட்டமைப்பு அமைவதற்கு அவர்கள் இடமளிக்கமாட்டார்களாம்.

இத்தகைய கொள்கைச் சீத்துவத்தில் அமையும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தரப்பை இத்தேர்தலில் தமிழர்கள் ஆதரிப்பது என்பது துர்லபமே. அது பெரும்பாலும் சாத்தியமேயற்றதுதான்.

# நாக மரக்கன்றுகளை கம்போடியாவில் வழங்கினார் ஜனாதிபதி மைத்திரிபால!

**கொழும்பு, ஓக. 12**

**இலங்கைக்கும் கம்போடியாவுக்கும் இடையிலான நட்புறவை அடையாளப்படுத்தும் வகையில் கம்போடியாவின் ஒக் தோங் மலையில் அமைந்துள்ள தியான நிலையத்துக்கு இலங்கையின் தேசிய மரமான 10 நாக மரக்கன்றுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் வழங்கினார்.**

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

பௌத்த மதத்தை அடிப்படையாகக்கொண்ட இலங்கைக்கும் கம்போடியாவுக்கும் இடையிலான தொடர்பை அனைத்துத் துறைகளிலும் மேம்படுத்தும் நோக்கில் கம்போடிய மன்னரால் விடுக்கப்பட்ட விசேட அழைப்பின் பேரில் ஜனாதிபதி கம்போடியாவுக்கான விஜயத்தை கடந்த புதன் கிழமை மேற்கொண்டார். இது இலங்கை ஜனாதிபதி ஒருவர் கம்போடியாவில் அரசமுறை சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் என்பது குறிப்பிடத்தக்கது.

புனித திரிபீடகத்தை உலக மரபுரிமையாகப் பிரகடனப்படுத்தும் அதேவேளை, தேரவாத பௌத்த தர்மத்தை பாதுகாத்து உலகெங்கும் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இலங்கையில் விரிவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில், தேரவாத பௌத்தத்தை போஷிக்கும்நாடுஎன்றவகையில்கம்போடியாவுக்கு ஜனாதிபதி மேற்கொண்ட இந்த சுற்றுப் பயணமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக உறவுகளை வலுவூட்டும், பௌத்த மத உறவுகளை மேம்படுத்தும் நிகழ்ச்சிகளிலும் ஜனாதிபதி பங்கேற்றார். இந்த நிகழ்ச்சித் தொடரின் பிரதான நிகழ்வாக நாக மரக்கன்றுகளை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பௌத்த மதத்தை முதன்மையாகக் கொண்டிருக்கும் கம்போடியாவில் நாக மரம் காணக் கிடைப்பதில்லை என்பதும், பௌத்த மத ரீதியாக சிறப்பு வாய்ந்த நாக மரக்கன்றுகளை வழங்கி வைத்ததனூடாக இரு நாடுகளுக்கிடையே பௌத்த மத நல்லுறவுகள் மேலும் வலுவடையும் என்றும் அந்நாட்டு மகாசங்கத்தினர் கருத்து தெரிவித்தனர்.

மேலும் கருத்து தெரிவித்த அந்நாட்டு மகாசங்கத்தினர், இலங்கைக்கும் கம்போடியாவுக்கும் இடையிலான பௌத்த மத நல்லுறவு மிகவும் பழமை வாய்ந்தது என்றும், நிகழ்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான பௌத்த மத நல்லுறவை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை




மேற்கொண்ட தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நாமம் வரலாற்றில் பொறிக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த வண. கலாநிதி ஓமல்பே சோபித நாயக்க தேரர், புனித பௌத்த தர்மத்தை பாதுகாப்பதுடன், அதனை உலகம் முழுவதும் வியாபிப்பதன் முக்கியத்துவத்தை பௌத்த தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனங்கண்டுள்ளார் என்று தெரிவித்தார். மேலும், ஆசிய பௌத்த சங்கமொன்றை நிறுவி ஆசிய கண்டத்தின் அனைத்து நாடுகளையும் ஒன்றிணைக்க வேண்டும் என ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார் எனவும் அவர் கூறினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த சோபித நாயக்க தேரர், மகத்துவம்மிக்க நாக மரக் கன்றுகளை ஜனாதிபதி வழங்கி வைத்தமை உன்னத நிகழ்வாக ஆன்மீக வரலாற்றில் இந்நிகழ்வு இணைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கம்போடியா மகா சங்கத்தினர் மற்றும் இலங்கை – கம்போடியா பக்தர்கள் உள்ளிட்ட குழுவினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர் –என்றுள்ளது.

# காரைநகர்க் கடலுக்குள் பாய்ந்தது மணல் டிப்பர்









யாழ்ப்பாணம், ஓக. 12

பொன்னாலை – காரைநகர் வீதியில் பயணித்த டிப்பர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டையிழந்து கடலுக்குள் பாய்ந்தது. தெய்வாதீனமாகச் சாரதி காயங்களுடன் தப்பித்தார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் பொன்னாலை – காரைநகர் பாலத்தில் கடலுக்குள் தடம் புரண்டது. பாலத்தின் அருகே அமைக்கப்பட்டிருந்த குடிதண்ணீர் குழாய்கள் இந்த விபத்தினால் சேதமடைந்தன. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ – 07)

# வவுனியா விபத்தில் ஒருவர் படுகாயம்!

வவுனியா, ஓக. 12

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா நகரில் இருந்து குருமன்காடு நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஆதி விநாயகர் ஆலயக் குளக்கட்டு வீதியில் திரும்முற்பட்ட வேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

**நாளை** 13.08.2019 செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: அனுசம் பி.இ. 2.53 வரை
திதி : நவமி சித்தம் பி.ப. 2.53 வரை
இராகுகாலம் : 10.34 – 12.04
சுப நேரம் : 6.04 – 7.34

# பரப்புரையை இன்று தொடங்குகிறார் சஜித்

## பதுளையில் மாபெரும் கூட்டம்

கொழும்பு, ஓக. 12

**ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான இழுபறிகள் நீடிக்கின்ற நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்பும் கட்சியின் பிரதித் தலைவரான சஜித் பிரேமதாஸ இன்று பரப்புரைகளை ஆரம்பிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

ஜனாதிபதித் வேட்பாளர் விடயத்தில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இழுபறிநிலை நீடித்து வருகிறது.

இந்த நிலையில், சஜித் பிரேமதாஸவைப் போட்டியில் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தும் அணியினரின் சார்பில் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ இன்று பதுளையில் பெரிய பேரணி ஒன்றை நடத்தவுள்ளார்.

சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவான இந்தப் பேரணி, சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பரப்புரையின் தொடக்கமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைப் பேரணியாக இதனை நடத்துவதாக, அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, ஐ.தே.க. பொதுச் செயலர் அகில விராஜ் காரியவசத்துக்கு அறிவித்துள்ளார்.



எனினும், இந்த மாநாட்டில் கட்சியின் நடத்தை விதிகளை மீறினால், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.தே.க. பொதுச்செயலர் எச்சரித்துள்ளார்.

(ஐ)

# உயர் நிறுவனங்கள் முதல் கீழ் மட்டம் வரை ஊழல்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் விசனம்

கொழும்பு, ஓக. 12

அரசாங்கத்தின் உயர் நிறுவனங்கள் முதல் கீழ் மட்ட நிறுவனங்கள் வரையில் உள்ளவர்களிடையே இலஞ்சம், ஊழல், மோசடிகள் நிறைந்திருக்கின்றன என கொழும்பு ஆயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மீரிகமை கிரிஉள்ளகமவில் நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இத்தகையவர்கள் சட்டத்தைக் கையில் எடுப்பவர்களாகவும், ஒழுக்கம் விதிமுறைகளை மீறுபவர்களாகவும்



காணப்படுகிறார்கள் எனவும், இலங்கை உலகில் ஒழுக்கமில்லாத நாடு என்ற நிலைக்கு மாறியுள்ளமை வீதியில் இறங்கினால் தெரிய வருவதாகவும் கர்தினால் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.12

இலங்கை இளங் கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தையொட்டி நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் – இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணி முதல் 7.15 வரை குழுஇசை (கோப்பாய் தேசிய கலைக்கல்லூரி பழைய ஆசிரிய மாணவர்கள்) வயலின் – அ.ஜெயராமன், மிருதங்கம் –சி.மகேந்திரன், நெறியாள்கை – விக்னேஸ்வரி நரேந்திரா – 7.15 – 8.15 வரை இசைக்கச்சேரி பாட்டு – எம்.எஸ்.பிரதீபன், வயலின் – து.ஜெயராமன், மிருதங்கம் – ம.லோகேந்திரன், கெஞ்சிரா – எஸ்.சுலக்சன். (இ

# சிங்களவராக இருந்திருந்தால் ஜனாதிபதி ஆகியிருப்பேன்!

## கூறுகின்றார் அமைச்சர் மனோ

கொழும்பு, ஓக. 12

நான் ஒரு சிங்கள இலங்கையராக இருந்திருந்தால் இந்நேரம் நாட்டின் ஜனாதிபதி ஆகியிருப்பேன் என அமைச்சர் மனோ கணேசன் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



அந்தப் பதிவில் நான் ஒரு தமிழ் இலங்கையன். சிங்கள இலங்கையனாக இருந்திருந்தால் இந்நேரம் இந்நாட்டின் ஜனாதிபதி ஆகியிருப்பேன்.

தன்னம்பிக்கைதான் என் முதல் பலம். சிறுபான்மைத் தமிழர்கள் (தமிழ் பேசும் முஸ்லிம்களும்கூட) என்னை இன்னமும்கூட முழுமையாக புரிந்துகொள்ளவில்லை என நினைக்கிறேன். அத்தகைய புரிதல் வருவதற்குள் நான் பொதுவாழ்வில் இருந்து விடை பெற்று விடுவேன் என்றும் நினைக்கிறேன். என அவர் மேலும் கூறியுள்ளார்.

(ஐ)

# தமிழ்க் கூட்டமைப்பில் யாரும் மஹிந்தவைச் சந்திக்கவில்லை!

**கொழும்பு, ஓக. 12**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் என மஹிந்தவைச் சந்தித்தவர்களில் எவருமே கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் அங்கத்தவர்கள் கிடையாது என்று தமிழரசுக் கட்சியின் செயலர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.**



அவர் மேலும் கூறுகையில்–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் எனச் சிலர் மஹிந்தவைச் சந்தித்தனர் என்று சில ஊடகங்களில் செய்தி வெளிவந்ததோடு அவர்களின் ஒளிப்படமும் வெளிவந்துள்ளது.

உண்மையில் அந்த ஒளிப்படத்தில் இருப்பவர்கள் எவருமே கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் அங்கத்தவர்கள் கிடையாது. கூட்டமைப்புக்குக் களங்கம் விளைவிக்க எண்ணுபவர்களே இந்தத் தகவலை திட்டமிட்டுப் பரப்பியுள்ளனர். அல்லது சந்திப்பில் கலந்துகொண்டோர் மஹிந்தவை ஏமாற்றியுள்ளனர்–என்றார். (ஐ)

# வெளிநாட்டுத் தூதுவர்களாக 13 பேர்!

கொழும்பு, ஓக. 12

வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் 52 தூதரகங்களில் பணியாற்றுவதற்கு உயர் பதவிகள் குழுவினால் 13 புதிய தூதுவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அரச சேவைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்பட்டுள்ள நபர்களின் ஏற்புடைமைத் தன்மையை ஆராய்வதற்கான நாடாளுமன்ற உயர் பதவிகள் குழு செயற்படுகின்றது.

இந்தக் குழுவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் தலைவர்களாக பரிந்துரை செய்யப்பட்ட பதின்மூன்று நபர்களே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள குறித்த பதின்மூன்று புதிய தூதரகங்களின் தலைவர்களில், ஒன்பது பேர் இலங்கை வெளிநாட்டுச் சேவையைச் சேர்ந்த தொழில்முறை இராஜதந்திரிகளாவர்:

நைஜீரியாவுக்கான தூதுவர் – ஏ.எஸ். கான்,

குவைத்துக்கான தூதுவர் – யு.எல். முஹம்மத் ஜவுஹர்,

கொரியக் குடியரசுக்கான தூதுவர் – கலாநிதி. ஏ.எஸ்.யு. மென்டிஸ்

ஜோர்தானுக்கான தூதுவர் – எஸ். ஷானிகா திஸாநாயக்க,

வியட்நாமுக்கான தூதுவர் – டப்ளியு.ஜி.எஸ். பிரசன்ன,

நேபாளத்துக்கான தூதுவர் – ஹிமாலி அருணா திலக்க,

கியூபாவுக்கான தூதுவர் – லக்ஷித ரத்நாயக்க,

எத்தியோப்பியாவுக்கான தூதுவர் – பி.ஆர்.எஸ். சுகீஸ்வர குணரத்ன,

லெபனானுக்கான தூதுவர் – டி.பி.சி.டப்ளியு. கருணாரத்ன

தொழில்வாண்மை ரீதியில் 4 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்கான தூதுவர் – ஜனாதிபதி சட்டத்தரணி ஜே.சி. வெலியமுன

மலேசியாவுக்கான தூதுவர்–(ஓய்வுபெற்ற) முன்னாள் விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் கபில ஜயம்பதி,

மாலைதீவுக்கான தூதுவர்– முன்னாள் மேலதிக அளவையாளர் நாயகம் நிமால் கருணாரத்ன

கட்டாருக்கான தூதுவர்– சர்வதேச வர்த்தக ஆலோசகரும், வர்த்தகருமான கித்சிரி அத்துலத்முதலி.

இந்த நியமனங்களுடன் சேர்த்து, வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு தலைமை தாங்கும் தொழில்முறை இராஜதந்திரிகளின் விகிதாசாரமானது 2019ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் 37 வீதத்திலிருந்து 54வீதமாக உயர்வடைந்துள்ளது.

இந்த வருடத்தில் நியமிக்கப்பட்டுள்ள 27 தூதரகங்களின் தலைவர்களில், 23 பேர் இலங்கை வெளிநாட்டுச் சேவையைச் சேர்ந்தவர்களாவர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# பசும்புல்லைத் தின்ற 100 பசுக்கள் திடீரெனச் சுருண்டு விழுந்து சாவு!

## விஜயவாடா கோசாலையில் பரிதாபம்



கோசாலையில் பலியான பசுக்கள்

விஜயவாடா,ஓக.12

கோட்டூருதடையபள்ளியில் உள்ள பசு பாதுகாப்பு இல்லத்தில் நூறுக்கும் மேற்பட்ட பசுமாடுகள் திடீரென சுருண்டு விழுந்து இறந்தன.

ஆந்திர மாநிலம், விஜயவாடா புறநகர் பகுதியான கோட்டூருதடையபள்ளியில் உள்ள பசு பாதுகாப்பு இல்லத்தில்(கோசாலை) ஆயிரத்துக்கும் மேற்பட்ட பசு மாடுகள் உள்ளன. அவற்றில் நூறு பசுக்கள் நேற்று திடீரென சுருண்டு விழுந்து இறந்தன. மேலும் பத்துப் பசுக்கள் உயிருக்கு போராடி வருகின்றன.

இதுபற்றி அந்த இல்லத்தின் நிர்வாகிகள் காவல் துறைக்கும், கால்நடை பராமரிப்பு துறைக்கும் தகவல் தெரிவித்தனர்.

வெள்ளிக்கிழமையன்று தீவனமாக அளிக்கப்பட்ட பசும்புல்லை தின்று அவை சுருண்டு விழுந்து இறந்தன எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் உயிருக்கு போராடி வரும் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்து வரும் டாக்டர் கூறும்போது பசுக்கள் திடீரென்று இறந்தமைக்கான சரியான காரணத்தை உடனடியாகக் கண்டறிய முடியவில்லை. பிரேத பரிசோதனை நடத்தப்பட்டு தடய அறிவியல் சோதனைக்கு பின்னர்தான் அது பற்றி தெரியவரும் என்று தெரிவித்தார்.

அந்தப் பசுக்களுக்கு வழங்கப்பட்டது விஷ புல்லாக இருக்குமோ என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் சுற்று வட்டார கிராம மக்களை மிகுந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (உ)

# இந்திய டாக்டர் தம்பதி மகளுடன் அமெரிக்க விமான விபத்தில் பலி!



வொஷிங்டன்,ஓக.12

அமெரிக்காவில் நிகழ்ந்த விமான விபத்தில், இந்திய டாக்டர்தம்பதி, மகளுடன் பலியாகினர்.

அமெரிக்க நாட்டின் பென்சில்வேனியா மாகாணம், பிலடெல்பியா நகரில் வசித்து வந்தவர்கள் இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் ஜஸ்வீர் குரானா (வயது 60), டாக்டர் திவ்யா (54) தம்பதியர்.

இந்தத் தம்பதியர் கடந்த வியாழக்கிழமையன்று தங்கள் இளைய மகள்கிரணுடன்அங்கிருந்து, கொலம்பஸ் நகரில் உள்ள ஓஹியோ மாகாண பல்கலைக்கழக விமான நிலையத்துக்குசிறியரகவிமானத்தில் புறப்பட்டனர். விமானத்தை ஜஸ்வீர் குரானா ஓட்டினார். ஆனால் புறப்பட்ட 3 நிமிடங்களிலேயே அந்த விமானம், செயின்ட் லூயிஸ் என்ற இடத்தில் கீழே விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது.

இந்தக் கோர விபத்தில் 3 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

ஜஸ்வீர் குரானா தம்பதியரின் மூத்த மகள் அவர்களுடன் விமானத்தில் செல்லாதமையால் உயிர் பிழைத்தார். பலியான ஜஸ்வீர் குரானா, திவ்யா தம்பதியர் டில்லி எய்ம்ஸ் ஆஸ்பத்திரியில் பயிற்சி பெற்று 20 ஆண்டுகளுக்கு முன்பாக அமெரிக்கா சென்றவர்கள் எனத் தகவல்கள் கூறுகின்றன.

# இந்திய காங்கிரஸ் கட்சியின் இடைக்காலத் தலைவராக மீண்டும் சோனியா காந்தி!



புதுடில்லி,ஓக.12

இந்தியாவில் காங்கிரஸ் கட்சியின் இடைக்காலத் தலைவராக சோனியா காந்தி மீண்டும் தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 52 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. 400 தொகுதிகளில் படுதோல்வியை தழுவியது. இதையடுத்து, மே மாதம் 25 ஆம் திகதி காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து ராகுல் காந்தி ராஜினாமா செய்தார். தனக்கு பதில் புதிய தலைவரை தேர்வு செய்து கொள்ளும்படி அறிவித்தார். ஆனால் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் இதை ஏற்கவில்லை.

அவரை சமரசம் செய்ய முயற்சித்து வந்தனர். ஆனாலும் ராஜினாமாவைத் திரும்பப்பெற ராகுல் காந்தி திட்டவட்டமாக மறுத்துவிட்டார். பிரியங்காவை புதிய தலைவராக்க முயற்சி நடந்த போதும் அதையும் ராகுல் தடுத்து நிறுத்தினார். இதனால் கடந்த 77 நாள்களாகக் காங்கிரஸ் கட்சி தலைவர் பதவி இல்லாமல் தள்ளாடியபடி இருந்தது.

134 ஆண்டுகள் பாரம்பரிய சிறப்பு கொண்ட காங்கிரஸ் கட்சி இதுவரை இத்தகைய பரிதாப சோதனையைச் சந்தித்தது இல்லை.

இதற்கிடையே, தலைநகர் டில்லியில் நேற்று காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நடந்தது. காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் குழுச் செயலாளர்கள் 65 பேர் மற்றும் மாநில தலைவர்கள், சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் மன்மோகன் சிங் தலைமையிலான 5 குழுக்கள் அமைக்கப்பட்டன. மாநில முதல் மந்திரிகள், மாநில தலைவர்கள் உள்ளிட்ட பலர் இதில் அடங்குவர்.

இந்நிலையில், அகில் இந்திய காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவராக சோனியா காந்தி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார் என மூத்த தலைவரான குலாம் நபி ஆசாத் அறிவித்தார். சோனியா காந்தியும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து; புதுடில்லிக்கு ரஷ்யா முழு ஆதரவு!

மொஸ்கோ,ஓக.12


காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை இந்தியா ரத்து செய்த விவகாரத்தில், புதுடில்லியின் நடவடிக்கைகளுக்கு ரஷ்யா ஆதரவு தெரிவித்துள்ளது.

காஷ்மீருக்கு வழங்கப்பட்டு இருந்த சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்த மத்திய அரசு, அந்த மாநிலத்தை 2 யூனியன் பிரதேசங்களாக பிரித்து உள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக பல்வேறு வெளிநாட்டு தூதர்களுக்கு மத்திய வெளியுறவுத்துறை சார்பில் விளக்கிக் கூறப்பட்டு இருக்கிறது.

இதைத்தொடர்ந்து காஷ்மீர் நடவடிக்கைகளுக்கு ரஷ்யா ஆதரவு தெரிவித்து உள்ளது. இது தொடர்பாக அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் –

'இந்தியா–பாகிஸ்தான் இடையிலான சுமுக உறவை ரஷ்யா தொடர்ந்து ஆதரித்து வருகிறது. காஷ்மீரின் அந்தஸ்து மாற்றம் மற்றும் அதை இரு பகுதிகளாகப் பிரிக்கும் நடவடிக்கை அனைத்தும் இந்திய குடியரசின் அரசியல் சாசன கட்டமைப்புக்குள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன' என்று கூறப்பட்டு இருந்தது.

இந்த நடவடிக்கையால் காஷ்மீரில் நிலைமை மோசமடைவதை இரு நாடுகளும் அனுமதிக்காது என நம்புவதாகக் கூறியுள்ள ரஷ்யா, தங்களுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகளுக்கு சிம்லா ஒப்பந்தம் மற்றும் லாகூர் பிரகடனம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசியல் மற்றும் தூதரக ரீதியில் இரு நாடுகளும் தீர்வு காணும் என நம்புவதாகவும் குறிப்பிட்டு உள்ளது.



# கேரளா, கர்நாடகா, மராட்டியத்தில் மிகக் கடுமையான வெள்ள பாதிப்பு!



திருவனந்தபுரம்,ஓக.12

நடப்பு ஆண்டு பருவமழையால் கேரளா, கர்நாடகா, மராட்டிய மாநிலங்களில் கடும் வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கேரளாவில் வெள்ள பாதிப்பு மற்றும் நிலச்சரிவால் 57 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். ஒரு லட்சத்து 66 ஆயிரம் பேர் தங்கள் இருப்பிடத்தை விட்டு, பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர். கர்நாடாகாவில் 30 பேர் பலியாகியுள்ளனர்.

மராட்டியம், குஜராத் மாநிலங்களிலும் கடுமையான வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மராட்டியத்தில் பெய்து வரும் பலத்த மழைக்கு இந்த வாரத்தில் மட்டும் 28 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் வழங்கப்படும் என்று முதல்வர் தேவேந்திர பட்னாவீஸ் அறிவித்துள்ளார். இதேபோல் குஜராத்தில் மழைக்கு 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

# தான்சானியாவில் பெற்றோல் டாங்கர் வெடித்துச் சிதறியதில் 57 பேர் சாவு!

## 65 பேர் வரையில் படுகாயம்





தான்சானியா நாட்டில் பெற்றோல் டாங்கர் லொறி வெடித்துச் சிதறியதில் 57 பேர் பலியானார்கள். 65 பேர் காயம் அடைந்தனர்.

தான்சானியா நாட்டின் தலைநகர் தாரிஸ் சலாமில் இருந்து மேற்கில் 200 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மொரோ கோரோவில் பெற்றோல் டாங்கர் லொறி சரிந்து கவிழ்ந்தது. இதனால் டாங்கரில் இருந்து பெற்றோல் ஆறாக ஓடியது.

இதைப்பார்த்த பொதுமக்கள் கையில் கிடைத்த பாத்திரங்களில் பெற்றோலை பிடித்துச் சென்றனர். அப்போது எதிர் பாராதவிதமாக டாங்கர் லொறி வெடித் துச் சிதறியது.

இதில் 57 பேர் பலியானார்கள். 65 க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந் தனர். இவர்கள் அனைவரும் டாங்கர் லொறியில் பெற்றோல் பிடிக்க வந்தவர் கள் ஆவார்கள்.

இந்த விபத்துக் குறித்து அரசுச் செய் தித் தொடர்பாளர் ஹசன் அப்பாசி தனது ட்விட்டர் பக்கத்தில் –


மொரோகோரோவில் எரிபொருள் லொறி சம்பந்தப்பட்ட விபத்துக் குறித்த தகவலால் நாங்கள் வருத்தமடைகி றோம். இந்த விபத்தில் பலர் உயிர் இழந்து உள்ளனர் – எனக் கூறி உள் ளார்.

மொரோகோரோ கிழக்கு ஆபி ரிக்காவில் துறைமுகத்திலிருந்து சரக்கு களை மாற்றுவதற்கான ஒரு முக்கிய பாதையாகும்.

(உ)

# சீனாவைத் தாக்கியது ‘லெகிமா’ புயல் 22 பேர் பலி; 10 பேரைக் காணவில்லை

## பத்து லட்சம் பேர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர்



பீஜிங், ஓக.12

சீனாவை ‘லெகிமா’ புயல் தாக்கியது. 22 பேர் பலியா கினர். 10 லட்சம் பேர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட் டனர்.

சீனாவை ‘லெகிமா’ என்ற புயல் மையம் கொண் டிருந்தது. இந்த ஆண்டில் அங்கு மையம் கொண்ட 9 ஆவது புயல் இது.

இந்தப் புயல் காரணமாக வெள்ளிக்கிழமை தொடங்கி ஷாங்காய் நகரம் உள்ளிட்ட பல நகரங்களில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வந்தது.

‘சூப்பர் புயல்’ என்று அழைக்கப்பட்டு வந்த இந்த புயல், சனி அதிகாலையில் தைவான் மற்றும் சீனாவின் நிதித் தலைநகரம் என்ற சிறப்புக்குரிய ஷாங்காய் நக ரங்களுக்கு இடையே அமைந்துள்ள வென்லிங் என்ற இடத்தில் கரையை கடந்தது. அப்போது அங்கு மணிக்கு 187 கி.மீ. வேகத்தில் பலத்த சூறாவளி காற்று வீசியது. இடைவிடாத மழையும் பெய்தது. தேசிய வானிலை ஆராய்ச்சி மையம் அபாய எச்சரிக்கை விடுத்தது.

பலத்த காற்றில் ஆயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின் கம்பங்கள் சரிந்தன. மின்விநியோகம் துண்டிக் கப்பட்டது. சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

ஷாங்காய் டிஸ்னிலேண்ட் பூங்கா, ஷாங்காய் டிஸ்னி விடுதி ஆகியவை முன் எச்சரிக்கை நடவடிக்கையாக மூடப்பட்டன.


தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் புயல், மழை காரணமாக தங்கள் வீடு களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். ஷாங்காய் நகரில் இருந்து மட்டுமே 2 லட்சத்து 53 ஆயிரம் பேர் வெளியேற் றப்பட்டனர் எனத் தகவல்கள் கூறுகின் றன. அவர்கள் அனைவரும் பாதுகாப் பான இடங்களில் தங்க வைக்கப்பட் டுள்ளனர்.

புயல், வெள்ளத்தில் சிக்கி 22 பேர் பலியாகி உள்ளனர்.



10 பேரை காணவில்லை. அவர்களின் கதி என்ன ஆனது என தெரியவில்லை.

‘லெகிமா’ புயல் காரணமாக ஜெஜியாங் மாகாணத்தில் 288 விமான சேவைகள் ரத்தாகின. படகு, சாலை போக்குவரத்துகளும் முடங்கின. 27 லட்சம் வீடுகள் மின்விநியோகமின்றி இருளில் மூழ்கின. மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கி உள்ளது. வென்ஜாவ் நகரில் நிலச்சரிவால் ஓர் அணை உடைந்தது. புயல், வெள்ளம் பாதித்த பகுதிகளில் முழுவீச்சில் மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன.



யாங்ஜியா நகரம் மிகவும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. அதைச்சுற்றிலும் சுமார் 120 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. அன்குய், புஜியான், ஜியாங்சு நகரங்கள் புயலால் நிலை குலைந்து போய் உள்ளன.

# மியன்மாரில் மழையால் வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 41 பேர் சாவு!



யாங்கூன், ஓக.12

மியன்மாரில் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 41 பேர் பலியாகினர்.

மியன்மார் நாட்டில் பெய்து வரும் கனமழை காரணமாக பல்வேறு பகுதி களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்தக் கனமழை மற்றும் வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் கடுமையா கப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், அந்நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள மோன் மாநிலத்தின் மலைப்பகுதியில் உள்ள தாப்யோகோன் கிராமத்தில் பெய்த கனமழையால் சனி யன்று திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் சிக் கிக்கொண்டனர்.

இது குறித்து தகவல் அறிந்த மீட்பு ப்குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து நிலச்சரிவில் சிக்கிய 28 பேரை உயிருடன் மீட்டனர். ஆனாலும், இந்த நிலச்சரிவில் சிக்கி 22 பேர் உயிரிழந்தனர் என முதற்கட்ட தகவல் வெளியான நிலையில் தற்போது மேலும் 19 உடல்களை மீட்பு குழுவினர் கண்டுபிடித்தனர். இதனால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் பலர் நிலச்சரிவில் சிக்கியி ருக்கின்றமையால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.




**இன்று சர்வதேச இளைஞர் தினம் ஆகும்**

# இளைஞர்களே வாருங்கள்!

## விடாமுயற்சியால் புதிய பாதைகளை தேடி முன்னேறுவோம்!!

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரப் பிரகாரம் சர்வதேச இளைஞர்தினம் ஆண்டுதோறும் ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி கொண்டாடப் படுகின்றது. இளைஞர்கள் ஒரு நாட்டின் நிர்ணய சந்ததிகள். இளைஞர்களை ஆக்க பூர்வமாகவும் பயன்படுத்தலாம். அதேநேரம், அழிவுபூர்வமாகவும் பயன்படுத்தலாம்.

பொதுவாக ஒரு நாட்டின் சொத்துக்களாகக் கருதப்படும் இளைஞர்களை நெறிப்படுத்தி அவர்களை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி செளபாக்கியமான எதிர் காலமொன்றுக்கு வழிகாட்டுவதும் அவர்களது உணர்வுகளை சிறந்த முறையில் நெறிப்படுத்துவதும், நம்பிக்கை உணர்வினையும், வெற்றி மனப்பாங்கினையும் ஏற்படுத்துவதுடன், இளைஞர்களின் செயற்பாடுகளை கெளரவித்து மதிப்பளிப்பதும் இத்தினத்தின் முக்கிய நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது.

1998 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 08 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை லிஸ்பன் நகரில் நடைபெற்ற உலக நாடுகளின் இளைஞர் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் குழு சர்வதேச ரீதியில் இளைஞர்களின் பிரச்சினைகளையும், இளைஞர்களின் செயல்பாடுகளையும் கவனத்திற் கொள்ளும் வகையில் இளைஞர்களுக்கான சர்வதேச தினம் ஒன்றை பிரகடனப்படுத்த வேண்டும் என சிபாரிசு செய்தது.

இதன்படி 1999 டிசம்பர் 17 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் 54/120/ (resolution 54/120) இலக்க பிரேரணைப்படி சர்வதேச இளைஞர் தினம் ஒகஸ்ட் 12 ஆம் திகதி கொண்டாடப்பட வேண்டுமென தீர்மானிக் கப்பட்டது. இதற்கமைய 2000 ஆம் ஆண்டு முதல் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

உலக இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பிரதானமாக கவனத்தில் ஈர்க்கும் முகமாக உலகளாவிய ரீதியில் அரசுகள், அரச நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் செயல்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறாக ஒகஸ்ட் 12 ஆம் திகதி சர்வதேச ரீதியில் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டாலும்கூட, சர்வதேசதினம் என்பதை விட ஒவ்வொரு நாடுகளும் தேசிய ரீதியில் இத்தினத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து கொண்டாடுவதை அவதானிக்கலாம்.

உதாரணமாக இந்தியாவில் விவேகானந்த அடிகளாரின் பிறந்த தினத்தை மையமாகக் கொண்டு 1985 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஜனவரி 12 ஆம் திகதி தேசிய இளைஞர் தினம் கொண்டாடப்படுகின்றது. எவ்வாறா யினும் சர்வதேச ரீதியிலும் சரி, தேசிய ரீதியிலும் சரி, பிரதேச ரீதியிலும் சரி இவ்வாறு கொண்டா டப்படும் விழாக்கள் ஒரே அடிப்படையினைக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

நமது வாழ்க்கையை உடலியல் அடிப்படையில் குழந்தைப் பருவம், இளமை, முதுமை என மூன்று பிரதானப் பிரிவுகளாக வகுக்கலாம். குழந்தைப் பருவத்தில் உடலாலும் மனதாலும் நமது தேவைகளை நிறைவு செய்ய மற்றவர்களைச் சார்ந்துள்ளோம். இந்தப் பருவம் ஒவ்வொருவரின் எதிர்கால வாழ்க்கைக்கு மிக முக்கியமானது. நல்ல பழக்கங்கள், துணிச்சல் தன்னம்பிக்கை ஆகியன ஆழ்மனதுக்குள் செலுத்தப்பட வேண்டிய பருவம். சொந்த அனுபவங்கள் இல்லாத பருவம். பாகுபாடு காணத் தெரியாத உழைக்க முடியாத பருவம்.

விடலைப் பருவம் அல்லது வளரிளம் பருவம் என்பது, மனிதருடைய உடல் மற்றும் உள வளர்ச்சிக் கட்டங்களில் சிறுவருக்கும், வளர்ந் தோருக்கும் இடைப்பட்ட ஒரு மாறுநிலைக் கட்டமாகும். இப் பருவத்துக்கான வயதெல்லை எல்லாப் பண்பாடுகளிலும் ஒரே அளவாகக் கருதப்படுவதில்லை. பல காலமாகவே பருவமடைதல் என்பது விடலைப் பருவத்துடன் தொடர்பு படுத்தப்பட்டு வந்துள்ளது.

அண்மைக் காலங்களில் பருவமடைதல் காலம் விடலைப் பருவத்துக்கு முன்னதாகவே தொடங்கி விடலைப் பருவத்துக்கு அப்பாலும் போவதைக் காணக்கூடியதாக உள்ளது. உலக சுகாதார நிறுவனம் விடலைப் பருவத்தை 10 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட காலம் என வரையறை செய்துள்ளது.

விடலைப் பருவத்துக்கு பின்னர் வரும் பருவம் இளமை ஆகும். பொதுவாக 18 – 24 அல்லது 29 வயதுவரை இளமைப் பருவம் எனப்படுகிறது. இவர்களை இளையோர் அல்லது வாலிபர் என்பர். பிற பருவத்தினருடன் ஒப்பிடுகையில் இளையோரிடம் குறிப்பிடத்தக்க சில பண்பியல்புகள் உண்டு.

இளைய பருவம் மாற்றத்தை இலகுவில் ஏற்று தன்னை மாற்றியமைத்துக்கொள்ள கூடியது, துணிவுமிக்கது, செயற்பாட்டை முதன்மைப்படுத்துவது. இப்பருவத்தில் பாலியல் கவர்ச்சியும் ஈடுபாடும் அதிகம் இருக்கும். இளையோரை பெரும் சதவீதமாக கொண்ட ஒரு சமூகம் வன்முறைப் போக்கு எடுப்பதற்கு கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு என்றும் கூறப்படுகின்றது. அனேக நாடுகளில் இளையோரே அதிகம் வேலையற்றோராக இருக்கின்றார்கள்.

முதுமை என்பதை 60க்கு மேல் எனக் கூறுவதே பொருத்தமாய் இருக்கும். பெரும்பாலும் 60 வருடம் என்பது பணி நிறைவுக்கான வயது. அதன்பின் ஓய்வு என்பது நடைமுறையிலுள்ள அரசு விதி, முதுமையில் பணிபுரிவதில் சக்தியின்மை இருந்தாலும் வாழ்க்கை அனுபவத்தால் இளைய தலைமுறைக்கு வழிகாட்டும் வாய்ப்பு உண்டு.

சுவாமி விவேகானந்தர், இளைஞர்கள் 100 பேரை என்னிடம் கொடுங்கள்; இந்திய நாட்டையே நல்ல நாடாக மாற்றிக் காட்டுகிறேன் என்று கூறியது இளைஞர் தம் சிறப்பு. உத்வேகம், அர்ப்பணிப்பு, நாட்டுப்பற்று மிக்க இளைஞர்களை வழிநடத்திச் செல்லக் கூடிய இளமை, துடிப்பு, சுயநலமில்லாது பாடுபடும் அர்ப்பணிப்பு, ஞானம் மிகுந்த விவேகா னந்தரைப் போல் ஒரு வழிகாட்டியைக் கண்டு கொள்வதுதான் இன்றையச் சூழலின் தேவை யாகிறது.

இன்று உலகின் எல்லா நாடுகளிலும் இளைஞர்கள் தம் திறமையை வெளிப்படுத்தி அந்த நாடுகளின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாக உள்ளனர். கடும் குளிர், மிகுந்த வெப்பம் என எந்தவிதமான நிலையிலும் பணி புரியும் தகுதியுள்ளவர்கள். தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது.

தன்னம்பிக்கையோடு திட்டமிட்டு, விடாமுயற்சியோடு செயல்வடிவம் கொடுக்க வேண்டும். Never, neer, neer give up என்று வின்ஸ்டன் சர்ச்சில் சொல்வதுண்டு. வீட்டில் ஜன்னலருகே வைக்கப்பட்டுள்ள செடியானது வெளிச்சம் தேடி வெளியே வளைந்து செல்வதைப் போல, விடா முயற்சியுடையவர்கள் புதிய பாதைகளைத் தேடிக்கொண்டு தொடர்ந்து முன்னேறுவர்.

வெற்றி பெற்றவர்கள் அனைவரும் மற்றவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் போது தாங்கள் மட்டும் விழித்திருந்து உழைத்தவர்களே. சலிப்புக்கு இடங் கொடாமல் கடும் உழைப்பை உணவாக உட்கொண்டவர்கள், ஒளி படைத்த கண், உறுதி கொண்ட நெஞ்சம், களிபடைத்த மொழி, கடுமை கொண்ட தோள், தெளிவு பெற்றமதி என்றெல்லாம் முகமன் கூறிய பாரதியின் வார்த்தைகளை மெய்ப்பிக்க வேண்டும். குறுகிய சிந்தனையில் வாழ்வைக் குலைத்துக்கொள்ளாமல் சமுதாய நோக்கில் சிந்தித்து செயல்பட்டால் இளைஞர்களுக்கு வெற்றி நிச்சயம்.

சர்வதேச இளைஞர் தினம் கலைவிழாக்கள், போட்டி நிகழ்ச்சிகள், இளைஞர் பாசறைகள், கலாசார நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களினூடாக முன்னெடுக்கப்படுகின்றன. 2000ம் ஆண்டில் முதலாவது சர்வதேச இளைஞர் தினம் கொண்டாடப்பட்டபோது இத்தினத்தை முறைப்படி கடைபிடிப்பதற்கு உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.



# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடார் மைத்திரி

## கூட்டு எதிர்க்கட்சிக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 12

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாதிருக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார் என அறியமுடிகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் இடையில் நடந்த சந்திப்பின்போது இது தொடர்பில் பரஸ்பர உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.**



எதிர்க்கட்சியில் போட்டியிடும் வேட்பாளருக்கு ஆதரவை தெரிவிக்கும் பட்சத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமது எதிர்கால அரசியல் தொடர்பான உத்தரவாதம் ஒன்றை ஜனாதிபதி மைத்திரி கோரினார் எனவும் ,அது தொடர்பில் கூட்டு எதிர்க் கட்சியுடன் பேசி முடிவெடுக்க மஹிந்த உறுதி யளித்தார் எனவும் தெரிகிறது.

கம்போடியாவில் இருந்து நாடு திரும்பிய கையோடு ஜனாதிபதி மைத்திரி இது தொடர்பில் அடுத்த கட்டப் பேச்சுக்களை நடத்தவுள்ளாரெனக் கூட்டு எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி பதவியில் இல்லாத சமயத்தில் எதிர்காலத்தில் அவருக்கு விசேட சிறப்புரிமைகளை வழங்குவது பற்றி ஆராயப் பட்டு வருவதாக மேலும் அறியமுடிந்தது. (ஐ)

# மைத்திரியைத் தவிர்க்கும் அமெரிக்க உதவி செயலர்

கொழும்பு, ஓக. 12

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள வுள்ள அமெரிக்காவின் தெற்கு, மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான பதில் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸ், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்கமாட்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



பாகிஸ்தானில் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் தெற்கு, மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான பதில் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸ்,அடுத்து இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அவர் இன்று வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

கொழும்பில் தங்கியிருக்கும் போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரச உயர்மட்ட அதிகாரிகளையும் வணிக சமூகத்தினர், சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் அவர் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

எனினும், அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸை, ஜனாதிபதி சந்திக்கமாட்டார் எனக் கூறப்படுகிறது.கம்போடியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி நேற்றிரவு கொழும்பு திரும்பினார்.

எனினும் அவருக்கு அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலருடன் எந்தச் சந்திப்பு நிகழ்ச்சி நிரலும் இல்லை என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி மைத்திரியை சந்திக்கிறார் கோட்டாபய



கொழும்பு, ஓக.12

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடப்படுவார் என எதிர்பார்க்கப்படும், கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இந்த வாரம் சந்திக்கவுள்ளார் எனக் கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பை முக்கியமான அரசியல் விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு இருவரும் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் கூட்டணியை உருவாக்குவது குறித்து இந்தச் சந்திப்பின் போது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# குண்டுதாரியுடன் புலனாய்வு அதிகாரிக்கு தொடர்புண்டா?

கொழும்பு, ஓக. 12

ஈஸ்டர் ஞாயிறன்று தெஹிவளை – நியூடொபிகல் விடுதியில் குண்டை வெடிக்கச் செய்து உயிரிழந்த சஹ்ரானின் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பை சேர்ந்த ஜமால்தீன் என்பவர், அரச புலனாய்வுச் சேவையில், முஸ்லிம் அடிப்படைவாதிகளை கண்டுபிடிக்கும் கியூ பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர்ஒருவருடன்கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அரபு மொழி படித்த வகுப்பு சகா எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த உப பொலிஸ் பரிசோதகர், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் குருநாகல் கடுபொத்தவில் அமைந்துள்ள சஹ்ரானின் மனைவியின் வீட்டுக்குச் சென்றிருந்தார் என கூறப்படுகிறது.

ஏப்ரல் 26ஆம் திகதி சாய்ந்தமருதுப் பிரதேசத்தில் வீடொன்றில் நடந்த தற்கொலைத் தாக்குதலில் இறந்த, இரண்டு பெண்கள் அப்போது அந்த வீட்டில் இருந்தனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சஹ்ரானின் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு அடிப்படைவாதச் செயல்களில் ஈடுபடுவதாக அரச புலனாய்வுச் சேவையின் கியூ பிரிவினர் கண்டறிந்திருந்தனர்என்பதுடன் ஜமால்தீனும் அவர்களுடன் இணைந்து செயற்படுவதும் கண்டறியப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில், அவருடன் படித்த புலனாய்வுப் பிரிவின் அதிகாரி பற்றி அறியாமல் இருந்தது சிக்கலுக்குரிய விடயம் என ஏனைய புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# அமெரிக்காவுடனான உடன்பாடு; ஆறு மாதங்களுக்கு நிறுத்த உத்தரவு

கொழும்பு, ஓக. 12

அமெரிக்காவுடன் மிலேனியம் சவால் நிதிய உடன்பாட்டை செய்து கொள்ளும் திட்டத்தை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஒகஸ்ட் முதலாம் திகதி நடந்த தேசிய பொருளாதாரச் சபை கூட்டத்திலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

மிலேனியம் சவால் நிதிய உடன்பாட்டின் மூலம், இலங்கையின் நெடுஞ்சாலை அபிவிருத்தி உள்ளிட்ட உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக 48 கோடி டொலரை அமெரிக்கா கொடையாக வழங்கவிருந்தது,

எனினும், எதிர்க்கட்சிகள் இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வரும் நிலையிலேயே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார். (ஐ)

# காசோலை வழங்கினார் நவீன்!






யாழ்ப்பாணம், ஓக. 12

வடக்கு மாகாணத்துக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டுள்ள பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சர் நவீன் திசாநாயக்க நேற்று முன் தினம் சனிக்கிழமை யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்தார்.

இந்த விஜயத்தின் போது யாழ். மாவட்ட தென்னந்தோட்ட தொழிலாளர்களுக்குக் காசோலை மற்றும் வீட்டுத் திட்டம் கிடைத்த பயனாளிக்குத் தென்னங்கன்றுகள் மற்றும் வேவெலி திட்டத்தில் பயிற்சிநெறியை முடித்தவர்களுக்கான சான்றிதழ் என்பன வழங்கும் நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்த அமைச்சர் பயனாளிகளுக்கான காசோலைகளையும் தென்னை மரக்கன்றுகளையும் வழங்கினார். (ஐ-07)

# அரசியல் முடிவெடுக்க தடுமாற்றம்; இந்தியாவுக்கு ஓடினார் ஆறுமுகம்

கொழும்பு, ஓக. 12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து தீர்க்கமான முடிவெடுக்க முடியாமல் தடுமாறும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் அவசர அவசரமாக இந்தியா சென்றுள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஆறுமுகத்துக்கு மஹிந்த தரப்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் – ஏற்கனவே ஐ.தே.கவுடன் இரகசிய பேச்சுக்களை நடத்திவரும் ஆறுமுகம் நேற்றைய கூட்டத்தைத் தவிர்க்கும் வகையில் இவ்வாறு சென்றுள்ளார். (ஐ)

# மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிப்பு!



இந்தியக் கிரிக்கெட் அணியுடன் நடைபெறும் டெஸ்ட் தொடருக்கான, 13 பேர் கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் அணி, மேற்கிந்திய தீவுகள் அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இதில் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் நடைபெற்று முடிந்துள்ளது. இந்த தொடரை இந்தியா அணி 3-0 என கைப்பற்றியது.

தற்போது இரு அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் போட்டி மழைக் காரணமாக கைவிடப்பட்ட நிலையில், இரண்டாவது போட்டி நேற்று நடைபெற்று இருந்தது.

இதற்கிடையில் இத்தொடருக்கு பின்னர் நடைபெறும், இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. தற்போது இதற்கான 13 பேர் கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜேஸன் ஹோல்டர் தலைமையிலான அணியில், 26 வயதான சுழற்பந்து வீச்சு சகலதுறை வீரரான ராகீம் கோர்ன்வேல், டெஸ்ட் போட்டிகளில் அறிமுகம் பெறவுள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் ஏ அணி, கரீபியன் பிரீமியர் லீக், கிரிக்கெட் சபை அணி ஆகியவற்றில் ராகீம் கோர்ன்வேல் விளையாடியிருந்தாலும், அவர் இதுவரை சர்வதேசப் போட்டிகளில் விளையாடியது கிடையாது.

6.5 அடி உயரமும் 143 கிலோ எடையும் கொண்ட பிரமாண்ட உடல் தோற்றத்தைக் கொண்ட இவரை, சர்வதேச போட்டிகளில் காண தற்போது இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.


இதேபோல, 30 வயதான துடுப்பாட்ட வீரர் மாரா புரூக்ஸும், டெஸ்ட் போட்டிகளில் அறிமுகம் பெறுகிறார்.

அல்சார்ரி ஜோசப் மற்றும் ஜோமல் வோரிக்கான் ஆகியோர் உபாதை காரணமாக அணியிலிருந்து விலகியுள்ளனர். மேலும் கிரைஜ் பிரத்வெயிட் மற்றும் கீமோ போல் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஜேஸன் ஹோல்டர் தலைமையிலான அணியில், கிரைஜ் பிரத்வெயிட், டேரன் பிராவோ, மாரா புரூக்ஸ், ஜோன் கெம்பல், ரொஸ்டன் சேஸ், ராகீம் கோர்ன்வோல், ஷேன் டவ்ரிச், செனோன் கெப்ரியல், சிம்ரொன் ஹெட்மியர், சாய் ஹோப், கீமோ போல், கெமார் ரோச் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 22ஆம் திகதி என்டிகுவா மைதானத்திலும், இரண்டாவது டெஸ்ட் போட்டி 30ஆம் திகதி ஜமைக்காவிலும் நடைபெறவுள்ளன.

# கொல்கத்தா நைட்ரைடர்ஸ் பயிற்சியாளராக மக்கலம்!



இந்தியாவில் நடைபெறும் ரி-20 கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். தொடரில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் துணைப் பயிற்சியாளராக, நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் பிரெண்டன் மக்கலம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

2016ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுப் பெற்ற பிரெண்டன் மக்கலம், அண்மையில் அனைத்து வித கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்றதற்கு பின்னர் தூதர், கிரிக்கெட் வர்ணனையாளர் பதவிகளை வகித்து வந்த மக்கலம், தற்போது பயிற்சியாளர் துறையிலும் கால் பதித்துள்ளார்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் கரீபியன் பிரீமியர் லீக் தொடரில் ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணிக்கு தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

தற்போது, ஐ.பி.எல். தொடரில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் துணைப் பயிற்சியாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக செயற்பட்டு வந்த தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரர் ஜெக் கலிஸ், நிர்வாகத்துடன் கலந்து ஆலோசித்து பரஸ்பர அடிப்படையில் அந்த பொறுப்பில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

அத்தோடு, உதவி பயிற்சியாளராக செயற்பட்டு வந்த ஆஸ்ரேலியாவின் முன்னாள் வீரர் சைமன் கேடிச்சும் பதவிலியிருந்து விலகினார்.

இந்த பின்னணியில் தற்போது பிரெண்டன் மக்கலம், அணியின் துணை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரெண்டன் மக்கலம் இதற்கு முன்னதாக கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்கும் விளையாடியுள்ளார். இதன்போதே அவர் ஆட்டமிழக்காது 158 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். இதுவே தற்போது வரை ஒரு வீரர் ஐ.பி.எல். தொடரில் பெற்றுக் கொண்ட அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக உள்ளது.

# எதிர்பார்ப்பு மிக்க இங்கிலாந்து அணி



ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான, இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

12 பேர் கொண்ட இங்கிலாந்து அணியில், கடந்த போட்டியில் இடம்பெற்றிருந்த சகலதுறை வீரர் மொயின் அலி, நீக்கப்பட்டு இடது கை சுழற்பந்து வீச்சாளர் ஜெக் லீச் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

அதேபோல, இங்கிலாந்து அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் அண்டர்சன் மற்றும் ஒல்லி ஸ்டோன் ஆகியோர் உபாதையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, அவர்களுக்கு பதிலாக ஜொப்ரா ஆர்செர் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமாகிறார். மேலும், சகலதுறை வீரர் சேம் கர்ரன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஜோரூட் தலைமையிலான அணியில், ஜொப்ரா ஆர்செர், ஜோனி பேயார்ஸ்டொவ், ஸ்டுவர்ட் பிரோட், றொறி பர்ன்ஸ், ஜோஸ் பட்லர், சேம் கர்ரன், ஜோ டென்லி, ஜெக் லீச், ஜேஸன் ரோய், பென் ஸ்டோக்ஸ், கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 14ஆம் திகதி லண்டன்- லோட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# அரையிறுதிக்குள் நுழைந்தார் செரீனா



கனடாவில் நடைபெற்றுவரும் ரொஜர்ஸ் கிண்ண டென்னிஸ் தொடரின், பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில், அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் வெற்றி பெற்று, அரையிறுதிக்குள் நுழைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில், அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ஜப்பானின் முன்னணி வீராங்கனையான நவோமி ஒசாகாவுடன் பலப்பரீட்சை நடத்தினர்.

எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், ஆக்ரோஷமாக விளையாடிய செரீனா வில்லியம்ஸ், 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

நேற்றைய அரையிறுதிப் போட்டியில், செரீனா வில்லியம்ஸ், செக். குடியரசின் மேரி போவுஸ்கோவாவை எதிர்கொள்ள இருந்தார். (ஐ)

## கொச்சிக்கடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸ், ஈஸ்டர்ஞாயிறன்று குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தைப்பார்வையிட்டார்.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் அலைனா ரெப்லிட்சுடன் கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்துக்குச் சென்றதெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பதில் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸ், குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து அருட்தந்தையிடம் கேட்டறிந்தார்.

அத்துடன் தேவாலயத்துக்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் பார்வையிட்ட அவர், தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக வைக்கப்பட்டுள்ள ஒளிப்படங்களையும் பார்வையிட்டார். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் தற்போது நடைபெற்ற நீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

மஹிந்த, சரியாக நேற்றுமாலை 4 மணியளவில் கோட்டாபயவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தார்.

அவர் கோட்டாவின் பெயரை உச்சரித்ததுமே, திடீரென மாநாட்டில் பங்கேற்றிருந்தவர்கள் பெரும் கரகோசம் எழுப்பி கோட்டாவின் படங்களை உயர்த்திப் பிடித்தனர்.

அதன்பின்னர் கோட்டாவை வரவேற்கும் பாடல் ஒலிக்கவிடப்பட்டது. அதன்போது கோட்டாபய மேடையில் மஹிந்தவுடன் காட்சியளித்தார்.

அதேவேளை, கோட்டாவின் பெயர் அறிவிக்கப்பட்டதும் நாட்டில் பல பகுதிகளிலும் பட்டாசு கொளுத்தி மஹிந்தவின் சகாக்கள் ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

பொதுஜன பெரமுனவின் மாநாட்டில் சுதந்திரக் கட்சியின் உத்தரவையும் மீறி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.பி.திசநாயக்க, டிலான் பெரேரா, சரத் அமுனுகம ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்த மாநாட்டில் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், வட - கிழக்கு முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் உள்ளிட்ட பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## மொட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற நீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் கட்சியின் நிறுவுநர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், கட்சியின் தலைவர் பதவிக்கு மஹிந்தவை பரிந்துரைக்கும் யோசனையை முன்வைத்தார். அந்த யோசனை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்பின்னர் நீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்ற மஹிந்த, எங்களால் மட்டுமே நாட்டை ஆள முடியும் என்று உரையாற்றினார்.

## எங்கள் ஆட்சியில்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வதற்கு தேவையான அடிப்படை வசதிகளை நாட்டில் ஒவ்வொரு பிரதேசத்திலும் மேம்படுத்துவதன் மூலம், கைத்தொழில் மற்றும் வியாபாரங்கள் நகரத்திற்கு மட்டும் வரையறுக்கப்படாது கிராமத்திற்கு கொண்டுச் செல்வதை முயற்சிக்கலாம்.

நாட்டில் ஒவ்வொரு பிரதேசத்திலும் அதிவேக இணையத்தள வசதிகளை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். அப்போது எமது இளைய தலைமுறையினர்; வீட்டிலிருந்தே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உலகத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கும் வியாபாரங்களை மேற்கொள்வதற்கும் முடியுமாகும்.

பெரும்பாலான நடுத்தர வகுப்பு குடும்பங்களுக்கு பிரச்சினையாக வுள்ள, தமக்கே சொந்தமான வீடொன்றின் தேவைக்கு, தீர்வாக முறையானதும் துரிதமானது மான நிகழ்ச்சித்திட்டமொன்றை, நான் தேசிய மட்டத்தில் அறிமுகப் படுத்துவேன்.

எதிர்கால தலைமுறையினரின் பொருட்டு சுற்றாடலை பாதுகாத்தல் எம் அனைவரினதும் பொறுப்பாகும். நான் அன்று ஆரம்பிக்கப்பட்ட நகர அலங்கார கருத்திட்டங்கள் மற்றும் பசுமை நகர எண்ணக்கருக்கல் என்பன நாடுபூராகவும் விஸ்தரிப்பதற்கு நாம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம்.

அழிந்துச் செல்லும் எச்சரிக்கைக்கு உள்ளாகியுள்ள இயற்கை வனங்களை மீண்டும் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். அதேபோன்று அனைத்து தரிசு நிலங்களை பொருத்தமானவாறு பயன்படுத்தி புதிய தேசிய வனச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவேன்.

ஆயிரம் ஆண்டுகளிலான வரலாற்றினைக் கொண்டுள்ள எமது நாடு, எப்போதும் சமயத்திற்கும் தர்மத்திற்கும் ஒத்திசைந்த, பண்பான மக்கள் உள்ள, நல்ல காலாச்சாரத்திற்கும் நெறிமுறைகளுக்கும் பிரசித்திபெற்ற நாடாகும்.

ஆயினும் இன்று வீதியில் செல்கையில், வாகனங்களை ஓட்டும்போது, குப்பை கழிவுகளை அகற்றும்போது, மகளிரை கவனிக்கும் முறை பற்றி அவதானிக்கும்போது இந்த பண்பாடுகளில் வீழ்ச்சி காணப்படுகிறது.

ஏனையோர்களுக்கு இடையூறுகள் ஏற்படாத வகையில் வாழ்தல் எல்லா பிரசைகளினதும் கடமையாகும்.

மக்கள் எதிர்பார்க்கின்ற அந்த ஒழுக்கமுடைய சமூகத்தை உருவாக்குவதற்கு நாம் பணியாற்றுவோம்.

அதற்கான முன்மாதிரியினை நாட்டின் தலைமைத்துவத்தால் வழங்கப்படுதல் வேண்டும்.

வரலாற்றில் எமது நாடு பிரசித்தி பெற்றதுபோல் மகளிர்க்கு அச்சமின்றி எந்தவொரு இடத்திலும், எந்தவொரு நேரத்திலும் தனியாக பயணிக்க முடியுமானவாறு நாட்டை நாம் கட்டியெழுப்புவோம்.

பல்வேறு விபத்துகளுக்கு உள்ளாகியுள்ள படை வீரர்கள், சிவில் பிரஜைகள் மற்றும் பிறக்கும்போதே விசேட தேவைகள் உள்ள பிரஜைகளின்மீது நாம் என்றும் விசேட கவனம் செலுத்தினோம்.

எதிர்வருங் காலத்தில் அரச மற்றும் தனியார் துறையின் சேவைகளை வழங்கும்போது அவர்களின் விசேட தேவைகள் தொடர்பாக கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு முதலிடம் வழங்குவதற்கு நாம் பணியாற்றுவோம்.

எமது நெறிமுறைகள் மற்றும் கலாச்சாரம், சுதேச சிந்தனை, தேசத்தின் இறையாண்மை எமக்கு மிகவும் முக்கியமாகும்.

நாம் எல்லா நாடுகளுடனும் நட்புறவை பேணுவதற்கு தயாராக உள்ளோம். ஆயினும், நாம் எந்தவொரு நாட்டுக்கும் எமது இறையாண்மையை காட்டிஜக் கொடுப்பதற்கு தயாராக இருக்க மாட்டோம்.

ஆகையால் இராஜதந்திர உறவுகளின்போது, எந்தவொரு வெளிநாட்டுக்கும் முன்னே அடிபணியாத, நாட்டின் இறைமையை எப்போதும் பாதுகாக்கும், எந்தவொரு நாட்டுடனும் சம மட்டத்தில் கொடுக்கல்வாங்கல் மேற்கொள்கின்ற, சுதேச

முன்னர் நிகழ்ந்த பிழைகளை சரிசெய்துகொள்வோம். அதே போன்று நாம் பயணிக்கும் பயணத்தில் குறைப்பாடுகளை தேடிப் பார்த்து, துரிதமாக அதனை சரி செய்துக் கொண்டு எமது நீண்ட கால நோக்கத்தின்மீது செல்லுதல் வேண்டும்.

இதற்காக தனிப்பட்ட நோக்கங்களையும் பார்க்க, பொது நோக்கத்துடன் பணியாற்றும், முழுமனதுடன் நாட்டை ஆதரிக்கும், ஆக்கத்திறனுடன்கூடிய, திறமையான, அறிவுடன்கூடிய குழுவினரை எம்முடன் இணைத்துக்கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

எதிர்வருங்காலத்தில் வருகின்ற ஜனாதிபதி தேர்தல் நாட்டுக்கு மிக முக்கியமாகும். அது நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தலாகும்.

ஆகையால் இத் தருவாயில் எமது நாட்டில் அனைத்து பிள்ளைகளினதும் எதிர்காலம் பொருட்டு கட்சி வேறுபாடின்றி கைகோர்த்துக்கொள்ளும்படி சிங்கள, தமிழ், முஸ்லிம், மலே மற்றும் பர்கர் ஆகிய அனைத்து இனங்களுக்குரிய நாட்டுப் பற்றுமிக்க மக்களிடமிருந்து நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த முக்கியமான நாளில் நான் உங்களிடம் ஒரு முக்கிய மானவேண்டுகோளை முன்வைக்க விரும்புகின்றேன்.

இன்று முதல் நாம் இலங்கை வரலாற்றில் மற்றுமொரு வகையிலான சுதந்திர போராட்டத்தினை தொடங்குகின்றோம்.

அந்த கௌரவமான நோக்கம் பொருட்டு, மேற்கொள்கின்ற தேர்தல் இயக்கத்தினையும், நாம் மிகவும் கௌரவமான முறையில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆகையால் எமது முழு மொத்த தேர்தல் இயக்கத்தினை ஒழுக்கத்துடனும், சட்டத்தை மதிக்கும் வகையிலுமான, தேர்தல் இயக்கமாக பேணிச் செல்லுதல் வேண்டும்.

இந்த தேர்தல் இயக்கத்தில் எப்போதும் சுற்றாடல் பாதுகாப்புக்கு முதலிடம் வழங்குவோம்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் உபயோகமற்ற தேர்தல் இயக்கம் ஊடாக ஏனைய அனைத்து கட்சிகளுக்கும் முன்மாதிரியாக திகழ்வோம்.

அரசியல் எதிரிவாதிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும், தனிப்பட்ட குற்றச்சாட்டுகளை மேற்கொள்கின்ற பொய்களை சொல்லி மக்களை ஏமாற்றும் தேர்தல் கலாசாரத்தை நாம் மாற்றுவோம்.

நான் உங்களிடம் வேண்டுவது, எமது எதிரிவாதிகளின் பிழையான கருத்துகளுக்கு தர்க்கீரியாக, உண்மையாக பதில் அளிக்குமாறு ஆகும்.

இன்று எமது நாட்டில் வாக்காளர் அரசியல் ரீதியாக நெகிழ்வுத்தன்மை மிக்கவராக உள்ளார். விசேடமாக இன்று நாட்டில் இளைய தலைமுறையினர் மிகவும் அறிவுத் திறன் கொண்டவர்களாக உள்ளார்கள். பொய்யால் உண்மையை வேறுபடுத்தி இனம் காணுவதற்கு அவர்களுக்கு ஆற்றல் உள்ளது.

எமது நாட்டு மக்களில் சரிபாதி 30 வயதுக்கு குறைந்தவர்களாவார்கள். ஆகையால் எமது நாடு இளம் தலைமுறையினரைக் கொண்ட சனத்தொகையுள்ள நாடாகும்.

நாம் எல்லோரும் எதிர்பார்ப்பது இந்த எதிர்கால சந்ததியினருக்கு அபிமானத்துடன் வாழ்வதற்கு முடியுமான சுதந்திரமான, சுபீட்சமான நாட்டினை கட்டியெழுப்புதலாகும்.

அதற்கு தேவையான நோக்கு எமக்கு உள்ளது. நாம் அதற்கு தேவையான திட்டங்களை தற்போது தயாரித்துள்ளோம்.

இதுவரை பொறுப்பெற்ற எல்லா பொறுப்புகளையும் உயர்ந்த மட்டத்தில் நிறைவேற்றியவாறு இந்த முறையும் உங்கள் அனைவரும் முன்னிலையில் நான் கௌரவத்துடன் கூறுவது, இன்று நாட்டுக்கு தேவையாக உள்ள நீங்கள் அனைவரும் கேட்கும், அந்த தேசிய கடமையினை நிறைவேற்றுவதற்கு நான் தயாராக உள்ளேன் – என்றார். (ஐ)

## மறுவாழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டின் முதலாவது மறுவாழ்வு சிகிச்சைப் பிரிவு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தனியான வைத்திய சாலை மாங்குளத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாட்டின்நாட்டின் சுகாதாரத் துறைக்குத்தேவையான அனைத்து நவீன உபகரணங்களும் சம கால அரசு அதிகாரத்திற்கு வந்த பின்னர் வைத்தியசாலைகளுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

225 சிறுநீரக குருதி சுத்திகரிப்புக்கான இயந்திரங்களே முன்னர் இருந்தன. இது தற்போது 500 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன. இவ்வருட இறுதிக்கு முன்னர் மேலும் இரத்த சுத்திகரிப்புக்கான ஆயிரம் உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது.

இதன் மூலம் அடையாளம் காணப்படாத சிறுநீரக நோயாளர்களுக்கான சிகிச்சை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். சிங்கப்பூரில் கூட இல்லாத நவீன உபகரணங்கள் இலங்கையில் தற்போது உள்ளன என்று சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார்;.

அனைத்து வைத்தியசாலைகளிலும் முறையான ஒழுங்கு விதிகளுக்கு அமைய எந்தவித உபகரணங்களும் தட்டுப்பாடு மின்றி விநியோகிக்கப்பட்டுள்ளன என்று மருத்துவ பொறியியலாளர் சேவைப் பிரிவின் பணிப்பாளர் பொறிறியலாளர் ஜனப்பிரிய கருணாதிலக தெரிவித்தார். (ஐ)

## கோட்டாவுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்ஷ அறிவிக்கப்பட்டதை அடுத்து, வடக்கில் பட்டாசுகள் வெடிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளிட்ட பல பகுதிகளிலும் பொதுஜன பெரமுன வினரால் வெடிகொளுத்தி கொண்டாடப்பட்டது.

மலையகத்தின் அநேகமான பகுதிகளில் பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி, பாற்சோறு சமைத்து பகிர்ந்துண்டு சந்தோசத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய நேற்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், டுவிட்டரில் அவரது பெயர் ட்ரெண்ட் ஆகியுள்ளது. டுவிட்டரில் இலங்கை ட்ரெண்டிங்கில் கோட்டாபய முதலிடம் பிடித்துள்ளார். (ஐ)

## வைராக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் நேற்றுக் கலந்துக்கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

போராட்டங்களை நடத்தி, அச்சுறுத்தல்களை விடுத்து முன்னெடுத்த அரசியலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே இந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உருவாக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த அரசு ஜெனிவாவில் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடும்போதும், மண் சரிவு ஏற்படும் போதும், கொழும்பு முதல் மட்டக்களப்பு வரை குண்டு வெடிக்கும் போதும், வரி அறவிடும்போதும், கொழும்பில் குப்பை துர்நாற்றம் வீசும் போதும் இந்த நாட்டு மக்களுக்கு தம்மை நினைவு வந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டுக்காக எமது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ள போதிலும், 2015ஆம் ஆண்டுக்கு முன்பு வழங்கியதை விடவும் மோசமான நாடொன்றையே எம்மால் பெறுப் பேற்க வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிறந்த நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்காக இன்றைய தினம் (நேற்று) நாம் புதிய கட்சியொன்றை உருவாக்கினோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கினோம். இந்தக் கட்சியை உருவாக்கிய பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினருக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன். அரசு எங்களுக்குப் பாரிய அளவில் அச்சுறுத்தல்களை விடுத்திருந்தது. அதையும் தாண்டி நாம் இந்தக் கட்சியை உருவாக்கியுள்ளோம். போராட்டங்களை நடத்தி, அச்சுறுத்தல்களைச் சந்தித்து இந்த இடத்திற்கு வந்தோம். நாம் குடும்பம் ஆட்சி அமைக்க முடியாத வகையில் அரசமைப்பை இந்த அரசு மாற்றியமைத்தது.

எமது சுதந்திரத்திற்காக நாட்டின் சுதந்திரத்தை நாம் விட்டுகொடுக்கவில்லை. நாட்டின் சுதந்திரத்தை இல்லாதொழிக்க ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. எம்மை இனவாதிகள் என கூறினார்கள். நாம் அவ்வாறு கிடையாது. ஆனால் இந்த அரசாங்கம் எந்த வொரு மதத்திற்கும், மார்க்கத்திற்கும் மதிப்பளிக்கவில்லை. நாம் வைராக்கியம் கொண்டவர்கள் என கூறினார்கள். வைராக்கியம் வைத்து வெற்றிக் கொள்வதற்கு தற்போது ஒன்றும் எனக்குக் கிடையாது. இந்த அரசு ஜெனிவாவில் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடும்போதும், மண் சரிவு ஏற்படும் போதும், கொழும்பு முதல் மட்டக்களப்பு வரை குண்டு வெடிக்கும் போதும், வரி அறவிடும் போதும், கொழும்பில் குப்பை துர்நாற்றம் வீசும் போதும் இந்த நாட்டு மக்களுக்கு எம்மை நினைவுக்கு வந்தது. நாட்டுக்கு எமது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனினும், 2015ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த நாட்டை விடவும் மோசமான நாடொன்றையே பொறுப்பேற்க வேண்டியுள்ளது. அச்சமின்றி விஹாரைக்குச் சென்று, அன்னதானம் கொடுக்கக்கூடிய நாடொன்றை உருவாக்க வேண்டும். கிறிஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்களுக்கு அச்சமின்றி அவர்களது மதத்தலங்களுக்கு செல்லக்கூடிய வகையிலான நாடொன்றை உருவாக்க வேண்டும். முஸ்லிம்கள் அனைவரும் தீவிரவாதிகள் அல்ல என்ற எண்ணம் கொண்ட நாடொன்று தேவைப்படுகின்றது. 365 நாட்களும் அவதானத்துடன் இருக்கக்கூடிய தலைவர் ஒருவர் தேவை. நாடொன்றில் ஒழுக்கம் இருக்க வேண்டும். சட்ட ஒழுங்கு வேண்டும். நண்பர்களில் கொள்ளை, கொலை இடம்பெறுமாயின், இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு கிடையாது. அவ்வாறு ஒழுக்கம் உள்ள ஒருவர் தேவைப்படுகின்றார். உலகிலேயே மிக மோசமான தீவிரவாதத்தை இல்லாதொழிக்க முடியும் என 2005ஆம் ஆண்டு யாரும் நினைக்கவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு தமது குழந்தைகளை சுதந்திரமான ரயிலில் அழைத்துவர முடியும் என தமிழ் மக்கள் நினைக்கவில்லை. முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடத்திற்கு செல்ல முடியும் என அவர்கள் நினைக்கவில்லை. ஆசியாவிலேயே மிக சுத்தமான நகரமொன்றை உருவாக்க முடியும் என யாரும் நினைக்கவில்லை. நாம் அதனை செய்தோம். எதிர்காலத்தில் அவ்வாறு செய்யக்கூடிய ஒருவர் தேவைப்படுகின்றார். 30 வருட காலம் வடக்கு தமிழ் மக்களின் ஜனநாயகம் இல்லாது செய்யப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத்திலுள்ள நூலகத்தை எரித்தது. இந்த நிலையில், வடக்கில் மாகாண சபை தேர்தலை 30 வருடங்களின் பின்னர் நாமே அந்த தேர்தலை நடத்தினோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு பின்னரே வடக்கிற்குச் சென்றது. வடக்கு மக்களின் ஜனநாயகம் பறிக்கப்பட்டுள்ளது. அந்த மக்களுக்கு ஜனநாயகத்தை மீண்டும் வழங்க வேண்டும். வடக்கு கிழக்கு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் – என்றார்.

## மீண்டும் வெள்ளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிக்கலாமா?

– இவ்வாறு கேள்வி எழுப்பினார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ அறிவிக்கப்பட்ட நிலையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குருநாகல் பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ரணில் மேலும் தெரிவிக்கையில் –

ஆடையையும், முகத்தையும் மாற்றுவதால் மட்டும் நாட்டில் மாற்றம் வரப்போவதில்லை.

போர் முடிவடைந்த பின்னர் கூட – 10 ஆண்டுகளாக நாட்டைக் கட்டியெழுப்ப முடியாதவர்களால் (ராஜபக்ஷ ஆட்சி), இனிவரும் ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் அதை எவ்வாறு செய்ய முடியும்?

வெள்ளை வான் கலாசாரத்துக்கு நாமே முடிவு கட்டினோம். வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்துக்கும் புத்துயிர் கொடுத்தோம். எனவே, மீண்டும் வெள்ளை வான் யுகத்தை நோக்கி பயணிக்கலாமா? – என்றார். (ஐ)

## கோட்டாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தின் தெற்கு மத்திய, ஆசிய விவகாரங்களுக்கான முதன்மைப் பிரதி உதவிச் செயலாளர் அலைஸ் வெல்ஸ்.

கொழும்பு 07, விஜயராம மாவத்தையிலுள்ள மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுப் பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்துள்ளார் எனக் கூறப்பட்டும் கோட்டாபய ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நேற்றுப் பிற்பகல் அறிவிக்க முன்னதாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பிரெபிளிட்ஸ், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)

# அரசியல் சுயலாபத்திற்காகவே பயன்படுத்தப்படும் தமிழர்கள்!

## அமைச்சர் சஜித் பிரேமதாஸ சீற்றம்

**யாழ்ப்பாணம், ஓக. 12**
**நாட்டிலுள்ள சில அரசியல்வாதிகள் வடக்கு - கிழக்கு மக்களை தங்களது அரசியல் சுயலாபத்திற்காகவே இத்தனை வருட காலமாக பயன்படுத்தி வந்தார்கள் என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். மேலும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்த மக்களை சுயகௌரவத்துடன் வாழ வைப்பதே பிரதான இலக்கு என்றும் இதனை தான் நிச்சயமாக நிறைவேற்றுவார் என்றும் அவர் குறிப்பிட்டார்.**



யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

வடக்கு – கிழக்குப் பகுதிகளில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இலட்சக்கணக்கில் இருக்கின்றன. இவர்கள் மிகவும் சிரமத்துக்கு மத்தியிலும் சவால்களுக்கு இடையிலுமே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு என விசேட வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க நான் தீர்மானித்துள்ளேன். வீடமைப்பு, சுகாதாரம், தொழில் என அனைத்தும் உள்ளடங்கும் வகையில் இந்த வேலைத் திட்டம் அமைந்திருக்கும்.

இந்த நாட்டில் அனைவரும் சமமானவர்கள். எனினும், வடக்கிற்கு நாம் வரும்போது கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள் என்பன மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்தக் குறை எல்லாப் பகுதிகளிலும் இருந்தாலும் வடக்கில் சற்று அதிகமாக இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. அரசமைப்பில் அனைவரும் சமம் என்று கூறினாலும் இங்கு அனைத்து விடயங்களிலும் வித்தியாசங்களும், ஏற்ற இறக்கங்களும்தான் காணப்படுகின்றன.

இதனை முதலில் அடியோடு மாற்றியமைக்க வேண்டும். இதனையும் நான் நிச்சயமாக செய்வேன் என்பதை இங்கு கூறிக் கொள்கிறேன்.

வடக்கு – கிழக்கு மக்களை சில அரசியல்வாதிகள், தங்களது சுயலாப அரசியலுக்காகவே இத்தனை காலம் பயன்படுத்திக்கொண்டிருந்தனர்.

நானும் கீழ் மட்டத்திலிருந்து வந்தவன்தான். எனது தந்தையும் கீழ் மட்டத்திலிருந்துதான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

எனவே, வடக்கு – கிழக்கு மக்களின் துயரங்கள் தொடர்பாக எனக்கு யாரும் பாடம் கற்பிக்க தேவையில்லை. இம்முறை, இந்த மக்களை எந்தத் தரப்பும் ஏமாற்ற நாம் இடமளிக்கப் போவதில்லை.

இந்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் அபிவிருத்திப் புரட்சியை நாம் நிச்சயமாக ஏற்படுத்துவோம்.

30 வருட கால யுத்தத்தில் கஷ்டப்பட்ட இவர்களுக்கு சுயகௌரவத்தை ஏற்படுத்துவதே எனது பிரதான இலக்காகும் என்பதையும் இவ்வேளையில் நான் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன் – என்றார். (ஐ)

# தேர்தலுக்குக் கரு தயார்!

கொழும்பு, ஓக. 12
நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு, சபாநாயகர் கரு ஜயசூரிய தயாராக இருக்கிறார் எனஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில், சர்வதேசத்தாலும் அனைத்து மக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவரையே தெரிவு செய்யவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதன் காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்தரக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களைப் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கிணற்றில் வீழ்ந்து யானை உயிரிழப்பு!

முல்லைத்தீவு, ஓக. 12
ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட சம்மளங்குளம் பகுதியில் விவசாயக் காணியில் காட்டு யானை ஒன்று விழுந்து உயிரிழந்துள்ளது.



விவசாயிகள் விவசாயம் செய்யும் கிணற்றில் கடந்த ஐந்து நாள்களுக்கு முன்னர் இந்த யானை விழுந்துள்ளதாகவும், இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டும் எது வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

சம்மளங்குளம் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாகவும், தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக தண்ணீருக்காக யானை அலைந்து கிணற்றில் வீழ்ந்துள்ளதாகவும் கிராம வாசிகள் கூறினர்.

# கொள்ளையர் இருவர் சூட்டுக்குப் பலி!

கொழும்பு, ஓக. 12
பொல்கஹவெல எரிபொருள் நிலையத்தில் பணத்தை கொள்ளையிட்டுக் கொண்டு தப்பிச் செல்ல முற்பட்ட இருவர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தில் கொள்ளையர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# காற்றின் வேகம் அதிகரிக்கும்

கொழும்பு, ஓக. 12
நாட்டின் பல பகுதிகளில் காணப்படும் காற்று மற்றும் மழையுடன் கூடிய காலநிலை தொடர்ந்தும் நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக வடமேல், மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் மாத்தளை



மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 60 - 65 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக் கூடும் என அந்த திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பிரதேசத்தில் தற்போது காணப்படும் காற்றுடன் கூடிய மழை நிலைமை அடுத்த சில நாட்களுக்கு மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படும் அதேவேளை, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் தொடர்ச்சியாக மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேல், மத்திய, வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமெனவும் கூறப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். (ஐ)

# கூட்டமைப்பில் இருந்து புளொட் விலகிவிடாது

## சித்தார்த்தன் கூறுகின்றார்



கொழும்பு, ஓக. 12
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமது கட்சி விலகிக் கொள்ளாது என, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடப்படவுள்ள கோட்டாபய ராஜபக்ஷவை புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கடந்த வாரம் சந்தித்திருந்தார். இதையடுத்து, கூட்டமைப்பில் இருந்து புளொட் விலகவுள்ளதாக வதந்திகள் பரவியுள்ள நிலையில், கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த செவ்வியில், தர்மலிங்கம் சித்தார்த்தன் அதனை மறுத்துள்ளார்.

எனது தலைமையிலான கூட்டமைப்பின் குழுவைக் கடந்த வாரம் கோட்டாபய ராஜபக்ஷ சந்திக்க அழைத்திருந்தார். இதன்போது, அவர் தாம் ஆட்சிக்கு வந்தால் 13 ஆவது திருத்தம் செயற்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்றும் உறுதியளித்தார்.

தென்பகுதி மக்களின் வாக்குகளால் மட்டும் தன்னால் வெற்றி பெற முடியும் என்றும், எல்லா மக்களாலும் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக இருக்கவே தாம் விரும்புகிறார் என்றும், அதற்கு தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதரவு தேவை எனவும் கோட்டாபய ராஜபக்ஷ கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் தனக்குத் தேவையில்லை என்று கோட்டாபய கூறவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கட்சிகள் நிறுத்தும் வேட்பாளர்களுக்காகக் காத்திருக்கிறோம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாரை நிறுத்தப் போகிறார் எனப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதனைப் பொறுத்து முடிவெடுப்போம். என்றும் அவர் கூறினார். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
௨0 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்
இல.10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2019 இல் வெளியிடப்பெற்றது.